# தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

## வருடாந்த அறிக்கை

## 2012

# தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை



## எமது நோக்கு

“தெங்குக்கைத்தொழிலில் மொத்தத் தேசிய
உற்பத்தகிக்காக
பொருந்தோட்டத்துறையினூடாக அதியுயரிய
பங்களிப்பினை வழக்குதல் மற்றும் உற்பத்தி
விற்பனை மற்றும் செயற்பாடுகளின் போது
கோலமய தலைமைத்துவத்தை வகித்தல்”

## எமது பணிக்கூற்று

மனைப்பயண்பாடு மற்றும் கைத்தொழிலுக்காக
மற்றும் தெங்கும் தெங்கு சார்ந்த உற்பத்தி
வழங்களை உறுதிப்படுத்துவதன் மூலம் தெங்குக்
கைத்தொழிலில் நீண்டகால வர்த்தக ரீதியிலான
பயண்பாடுகள், நீடித்த நிறந்தரம் மற்றும் தேசிய
பொருளாதாரத்திற்காக உயரிய
பொருளாதாரத்திற்காக வழ்குதல் மற்றும்
வசதிகளை வழங்குதல்.

# அறிமுகம்

தெங்கு கைத்தொழில் அபிவிருத்திக்காக 1971 இலக்கம் 46 கொண்ட தெங்கு அபிவிருத்தி சபையின் கீழ் தாபிக்கப்பட்ட பிரதான நிலையியல் சபை நிறுவனம் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையாகும். தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய அதிகார சபையின் பணிகள் விரிவான அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தெங்குக் கைத்தொழில் அபிவிருத்திக்காக கொள்கைகளை வகுக்கும் போதும் மற்றும் அவற்றை அமுல்படுத்தும் போதும் முன்னிலைத் தீர்மானங்களை எடுக்கும் பொழுது அமைச்சருக்கு உதவுதல்.

- அவ்வாறு தீர்மானிக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அமைவான செயற்றிட்டங்கள் மற்றும் யோசனைகளை வகுக்கும் போதும் உதவுதல் மற்றும் அச்செயற்றிட்டங்கள் மற்றும் யோசனைகளைத் தயாரித்தல்.

- அவ்வாறு தயாரிக்கும் செயற்றிட்டங்கள் மற்றும் யோசனைகளை அமுல்படுத்தும் போது உதவுவதற்காக அச்செயற்றிட்டங்கள் மற்றும் யோசனைத் திட்டங்களை செயற்படுத்தல்.

- தெங்கு அபிவிருத்தி சட்டத்தில் அமைச்சரினால் தாபிக்கப்படும் சபைகளின் பணிகளைக் கூட்டிணைத்தல்.

மேற்கூறப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக கைத்தொழில் செயற்பாடுகள் தெங்கு மற்றும் தெங்கு உற்பத்தியாளர்கள் உள்நாட்டு ஏற்றுமதி விற்பனை தொடர்பிலான சகல செயற்பாடுகளினதும் அபிவிருத்தி மற்றும் மேற்பார்வையுடன் தொடர்பான பொறுப்புக்களை வழங்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படும் கட்டளைகள் மூலம் தெங்கு அபிவிருத்திச் சபையின் 20ஆவது பிரிவின் கீழ், உரியவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

- தெங்கு சார்ந்த உற்பத்தி மற்றும் உற்பத்தி முறைகளை விரிவுபடுத்தலும், ஊக்குவிப்பதற்கு உதவுதல்.

- தெங்கு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக நவீன முறைகளை விருத்தி செய்தல்.

- ஊக்குவிப்புக்கள் மற்றும் நவீன மேம்படுத்தல், செயற்பாடுகள் மற்றும் தெங்கு உற்பத்தியாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிக்க உதவுதல்.

- இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது இலங்கையில் இருந்து ஏற்றுமதி தொடர்பான பண்புசார் அடிப்படையை பேணுதல் மற்றும கட்டளைகளை பிறப்பித்தல்.

- தெங்கு உற்பத்தியினை கொள்வனவு செய்தல், விற்பனை மற்றும் அவ்வுற்பத்தியினை கொள்வனவு செய்தல் உட்பட விற்பனை விரிவுபடுத்தல் பொதுவாக தெங்கு உற்பத்தியாளர்களுக்காக விசேட சிறு தெங்குத் தோட்ட உரிமையாளர்களின் தெங்கு உற்பத்திக்காக குறைந்தபட்ச உயர்ந்தபட்ச விலைமுறைகளை வகுக்கும் போது உதவுதல்.

- தெங்கு உற்பத்தி ஏற்றுமதி, இறக்குமதி மற்றும ஏற்றுமதி, இறக்குமதி விலையினை விரிவுபடுத்தல்.

- கண்காட்சி மற்றும் தெங்கு அபிவிருத்தியின் போது அதற்கு உதவுதல் மற்றும் பங்கேற்பின் போதும் அதற்கான தேவையான முறைகளைப் பின்பற்றுவதும், விற்பனை கூடங்கள் மற்றும் முகவர் நிலையங்களைத் தாபித்து அவற்றை முன்னெடுப்பதும், மேற்பார்வைகளை மேற்கொள்ளல், மற்றும் உதவிகளை மேற்கொள்ளுதலும், பிரச்சாரங்கள் மூலம் ஊக்குவிப்புப் பணிகளை ஆரம்பித்தல், அதற்கு நிதி வழங்குதல் மற்றும உதவிகளைப் புரிதலும், இலங்கையில் மற்றும் அதற்கு வெளியே உற்பத்தியாளர்களுக்கான கேள்விகளை ஏற்படுத்தல் உற்பத்தி ஊக்குவிப்பு அது சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

- இலங்கையில் மற்றும் அதற்கு வெளியே தெங்கு உற்பத்தியாளர்கள் விற்பனை மற்றும் போக்குவரத்து தொடர்பான சகல செயற்பாடுகள் குறித்து விற்பனை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.

- தெங்கு உற்பத்தியாளர்களின் வர்த்தகம், அல்லது உற்பத்தி செய்யப்படும் நிறுவனங்கள் மற்றும் தெங்கு தோட்ட செய்கை தொடர்பான முகாமைத்துவமும், உரிமைகள் தொடர்பாகவும் கூட்டுறவு, கூட்டுச் செயற்பாடுகளை விருத்தி செய்தல்.

- கப்ருக்க பேட்டை வேலைத்திட்டத்தின் கீழ், தெங்கு மற்றும தெங்கு சார்ந்த மூலப்பொருட்களை சேகரித்தலும், கைத்தொழிலை மேற்கொள்ளலும், தற்போது கைத்தொழில் விரிவடையாதுள்ள பிரதேசங்களில் கைத்தொழிலை அறிமுகப்படுத்தலும், ஊக்குவித்தலும்.

1980 தசாப்தத்தின் இறுதிப் பகுதியில் தெங்கு வர்த்தகம் தொடர்பான எல்லைகளைத் தளர்த்தியதன் பின்னர் தெங்கு ஏற்றுமதி பிரிவு தொடர்பான கவனம் செலுத்தி, அது சார்ந்த செயற்பாடுகள் மற்றும் விற்பனை துறையினை விருத்தி செய்தலும், ஊக்குவிப்பதற்குமான கொள்கைகள் உட்பட வேலைத்திட்டங்களை வகுத்தலும், அமுல்படுத்தல் ஆகிய பிரதான பணிகள் குறித்து அதிகார சபையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உற்பத்தியின் பண்புசார் தரம் தொடர்பான தரத்தினைப் பேணுவது குறித்து உரிய பணிகள் சார்ந்த நிறுவகச் செயற்பாடுகள் வரையறுத்தல். பணிப்பாளர் சபை அதிகார சபையின் நிருவாக சபை என்பதுடன், தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் அச்சட்டத்தின் சீர்திருத்தங்களுக்கு அமைய 11 அங்கத்தவர்களைக் கொண்டதாக பணிப்பாளர் சபை அமைந்துள்ளது. இதன் சகல உறுப்பினர்களும், நியமிக்கப்படுவது உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் ஆகும். பணிப்பாளர் சபையின் தலைவராக, அதிகார சபையின் தலைவர் நியமிக்கப்படுவார். இவ்வுறுப்பினர்களின் உத்தியோகபூர்வ காலம் 3 வருடங்கள் என்பதுடன், மீண்டும் ஒரு முறை நியமிப்பதற்காகவும் இவர்கள் தகைமை பெறுகின்றனர்.

அமைச்சரினால் தெங்கு அபிவிருத்திகள் தொடர்பிலான பிரதான கொள்கைகளை இனங்கண்டு வகுக்கும் போது அதற்காக உதவும் பணிகளை மேற்கொள்வதற்கு மேலதிகமாக தெங்குக் கைத்தொழிலில் செயற்பாடுகள் மற்றும் விற்பனைகள் பிரிவுகளின் அபிவிருத்தியின் போது, மேற்பார்வையின் போது செயற்பாட்டுப் பணிகளை அமுல்படுத்துவதற்கான பணிகளாக தெங்கு அபிவிருத்தி அதிகார வகையின் செயற்பாட்டுப் பிரிவு மற்றும் தர நிருவாக மற்றும் தரப்

பாதுகாப்புப் பிரிவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவு, மற்றும் நிதிப் பிரிவு மற்றும் நிருவாகம் ஆகிய ஐந்து பிரிவுகளைக் கொண்டு அமைந்துள்ளதுடன் அவ்வப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பணிகளை மேற்கொள்ளும் போது பொறியியல் பிரிவு மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவு மேற்கூறப்பட்ட பிரிவுகளுக்கு உதவிகளை வழங்குகின்றன.

பணிப்பாளர் நாயககத்தின் நிறைவேற்று உத்தியோகத்தராகச் செயற்படுவதுடன், அதிகார சபையின் பணிகளைச் செயற்படுத்தல், மேற்பார்வை மற்றும் பணிப்பாளர் சபையினால் வகுக்கப்படும் கொள்கைகள் உட்பட வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பான பொறுப்புக்களையும் வகிக்கின்றது.

2012ஆம் ஆண்டில் 121 ஊழியர்களைக் கொண்ட முழுமையான பணிப்பாளர் சபை அதிகார சபையில் சேவையாற்றுவதுடன், அவ்வுழியர்களின் எண்ணிக்கையில் 13 பேர் முகாமைத்துவ மட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்களாகும்.

# தலைவரின் மீளாய்வு - 2012

உலக தெங்கு செய்கையின் நான்காவது உரியமையாளரான இலங்கையிலுள்ள தெங்கு செய்கை காணியின் அளவு 394,836 ஹெக்டயராகும் (குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களம் - 2002) என்பதுடன், அது நாட்டின் மொத்த பயிற்சி செய்கை மேற்கொள்ளும் காணியளவில் 20% சதவீதமாகும். மொத்த தெங்கு செய்கை மேற்கொள்ளும் காணி அளவில் 82% , அதாவது 8 ஹெக்டயரைவிட குறைந்த சிறிய அளவு தெங்கு செய்கையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தெங்குத் தோட்டங்களாகும். தெங்கு மனிதனின் சமூக பொருளாதார செயற்பாடுகளில் பாரிய இணைப்பினைக் கொண்டிருப்பதுடன், தென்னை மரங்கள் பல்வேறுபட்ட உற்பத்திச் செயற்பாடுகளுக்காகவும பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கையின் வருடாந்த உற்பத்தி செய்யப்படும் தேங்காய்களின் எண்ணிகை 2900 என்பதுடன் இதில் 65% அளவு (2012 ஆண்டுக்காக ) உள்நாட்டு தேங்காய் பயன்பாட்டுக்காகக் காணப்பட்டது, எஞ்சிய 35% தேங்காய் தெங்கு சார்ந்த ஏனைய கைத்தொழில்களுக்காக (தேங்காய் எண்ணெய், உலர்த்திய தேங்காய், கொப்பரா, தேங்காய்ப் பால், தேங்காய் மா, உட்பட் அது சார்ந்த தேங்காய் ஏற்றுமதிகள் ) என்ற அடிப்படையில் பகிரந்து செல்கிறது. அத்துடன், தெங்குக் கைத்தொழில் துறையில் இலங்கை பெறும் ஏற்றுமதி வருமானம் உயரிய மட்டத்தில் காணப்படுவதுடன், 2012 அது ருபா 47 பில்லியனை அண்மித்துக் காணப்பட்டது, அத்துடன், தெங்குக் கைத்தொழில் துறையின் மொத்தத் தேறிய உற்பத்தியுடன் சேறும் பெறமதி 1.4% தை அண்மித்துக் காணப்படுவதுடன், தெங்கு மற்றும் அது சார்ந்த கைத்தொழில்கள் மூலம் நேரடி மற்றும மறைமுக தொழில்வாய்ப்புக்கள் உட்பட வாழ்வாதாரத் தொழில்கள் உருவாகின்றன.

அத்துடன், 2013ஆம் ஆண்டு தெங்கு மற்றும் அது சார்ந்த உற்பத்தி வருமானம் 50 பில்லியன் என எதிர்பார்க்கப்படுவதுடன், தெங்கு பயன்பாட்டின் மூலம் மக்களின் உணவுக்குத் தேவையான கலோரி அளவில் 15% சதவீதமும் புரதத்தில் 5% உம் கொழுப்பில் 70% சதவீதமும் வழங்கப்படுகின்றது.

தெங்கு செய்கை மற்றும் தெங்குக் கைத்தொழில் விருத்திக்காக அதிமேன்மை தாங்கிய ஜனாதிபதியினால் 2010ஆம் ஆண்டில் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி என தனியான அமைச்சரவை அமைச்சு உருவாக்கப்பட்டதுடன், அதன் மூலம் தெங்குத் துறையின் விருத்தி எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய அமைச்சு உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஜகத் புஷ்பகுமார அவர்களின் யோசனைக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்ட ''கப்ருக்க பேட்டை'' வேலைத்திட்டம் தெங்கு அபிவிருத்தித் துறையை புதிய திசைக்கு இட்டுச் செல்ல முடிந்துள்ளது. ''கப்ருக்க உற்பத்தி இல்லம்'' பயிற்சி வேலைத் திட்டம், நவீன தொழில்நுட்ப அறிவினைப் பெறல், ''கப்ருக்க ஊக்குவிப்பு'' கடன் யோசனைத் திட்டம், கப்ருக்க கிராமங்களைத் ஸ்தாபித்தல், சிறந்த உற்பத்தி முறைகள் (GMP) மூலம் உயர் தெங்கு உற்பத்பத்தினைப் பெறல், அறிவுறுத்தல் திட்டங்கள் போன்ற

பல்வேறுபட்ட செயற்பாடுகள் கப்ருக்க புறவற வேலைத்திட்டத்தின் ஊடாக ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், தெங்கு ஏற்றுமதியாளர்களைப் பதிவுசெய்தல், நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நடத்தப்படும், விவசாய, கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்றல், தேங்காய், கொப்பரா ஏலவிற்பனைகளை நடத்துதல், தெங்கு உற்பத்திகளின் உயர்தரத்தினைப் பாதுகாப்பதற்காக தர உறுதிப்பாடுகளை வழங்குதல் போன்ற பாரிய பணிகள் தெங்குக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக ஏற்கனவே தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சர்வதேச கண்காட்சிகளுக்காக பங்கேற்று இலங்கையின் தெங்கு சார்ந்த கைத்தொழலிகளுக்காகக் காணப்படும் வெளிநாட்டு சந்தை வாய்ப்பினைத் தொடர்ந்தும் விரிவுபடுத்துவதற்காக சகல ஆண்டுகளிலும் செயற்பாடுகளை நாம் மேற்கொண்டு இருப்பதுடன், அதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு தெங்கு கைத்தொழில் துறையினால் வழங்கப்படும் பங்களிப்புக்களை ஆண்டுதோறும் மேம்படுத்துவது எமது நோக்கமாகும்.

தெங்கு கைத்தொழிலாளர்களுக்கு இடையே தெங்குக் கைத்தொழில் துறையில் உயரிய பங்களிப்பினை வழங்குவது தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கிற்குக் அமைய செயற்பட்டு தெங்கு கைத்தொழிலாளர்களுக்கு தேவையான சகல வதசிகளையும் வழங்குதல் மற்றும் ஆலோசனைகளை வழங்கி, எதிர்வரும் காலங்களில் தெங்கு கைத்தொழில் துறையில் பாரிய முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை அர்ப்பணிப்புடன் செயற்படும். இதற்காக, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஜகத் புஷபகுமார மற்றும அமைச்சின் செயலாளர் கௌரவ நிஹால் சோமவீர அவர்களினால் கிடைக்கப்பெறும் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

**சட்டத்தரணி சுகத் ஹதுன்கே**
**தலைவர்**
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு - 2012

கடந்த காலங்களில் இலங்கை மக்கள் ''கப்ருக்க'' என தென்னை மரங்களை அறிமுகப்படுத்தினர். இன்று நவீன உலகில் உண்மையான கப்ருக்க மரங்களாக மாற்றம் பெற்றுள்ளது. தேங்காய் மரத்தின் எந்தவொரு பகுதியினையும் வீணாக்காது பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்வதினால் போட்டிகரமான சர்வதேச சந்தையினை வெற்றி கொள்வதற்காகவும், தற்போது தெங்கு சார்ந்த கைத்தொழில்கள் பெரிதும் பங்களிப்பு செய்துள்ளன.

எழுச்சிபெறும் இலங்கை தேசத்தின் அமுலிலுள்ள ''மகிந்த சிந்தனை'' வேலைத்திட்டத்திற்கு இணைவாக தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டல்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் ''கப்ருக்க உற்பத்தி இல்லம்'' தாபித்தன் விசேட அம்சமாகும். இதனூடாக கைவிடப்பட்டிருந்த கட்டத்தை பயன்படுத்தி கிராமிய மட்டத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், பயிற்சி நிறுவனங்களை தாபித்தல் மற்றும் கிராம மட்டத்தில நவீன வருமான மார்க்கங்களை உருவாக்குவதற்கும் பங்களிப்பு வழங்குவதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகார சபையக்கு வாய்ப்பு உருவாகி உள்ளது.

அத்துடன் அகற்றப்பட்ட தேங்காய் சிரட்டை, ஈக்கில் மற்றும் தேங்காய் மட்டைக்கும் பொருளாதாரப் பெறுமதியினை வழங்கி, அப்பொருட்களை மத்திய நிலையங்ளை தாபித்ததைத் தொடர்ந்து கிராமிய மட்டத்தில் மக்களின் பொருளாதாரத்தை உயரிய மட்டத்திற்கு மேம்படுத்துவதற்கு வாய்ப்பு உருவாகி உள்ளதுடன், அகற்றப்படும் தேங்காய் சிரட்டைகளை சேகரிக்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதற்கும், டெங்கு போன்ற ஆட்கொல்லி நோய்களை ஒழிப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்திற்காகவும் அதிகார சபையின் பங்களிப்பினை வழங்க முடிந்துள்ளது.

தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த கைத்தொழில்களை விருத்தி செய்தல், கைத்தொழிலுக்குப் புதிதாகப் பிரவேசிக்கும் தொழில் முயற்சியாளர்களின் மூலதனத் தேவைகளை நிவர்த்தி செய்தல் போன்றவற்றுக்காக ஆரம்பிக்கப்பட்ட ''கப்ருக்க உற்பத்தி ஊக்குவிப்பு'' கடன் யோசனைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக எம்முடன் கைகோர்த்து மக்கள் வங்கிக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், ஏற்கனவே இது வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சந்தையின் தேவைகளுக்கு ஏற்றவாறு பண்புசார் தரமிக்க உற்பத்திகளை மேற்கொள்வதற்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தும் நோக்குடன் சிறந்த உற்பத்தி முறைகளும் (GMP) உறுதிப்படுத்தல்கள் தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்காக இலங்கை தர நிருவாகத்தினால் தரப்பட்ட பங்களிப்புக்களை நினைவுகூறுவதுடன், கைத்தொழிலாளர்களும் இது தொடர்பில் காண்பிக்கும ஆர்வம் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

துற்போது வெளிநாட்டு சந்தையில் கணிசமான கேள்விகள் காணப்படுவதுடன், காபன் எனப்படும் தேங்காய் சிரட்டை, நிலக்கரி சூழலுக்கு உகந்ததாக உற்பத்தி செய்வதற்காக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் புதிய முறைகள் பரீட்சார்த்திக்கப்பட்டதுடன், 2013ஆம் ஆண்டில் இதற்காக கூடுதலான பங்களிப்புக்களை வழங்கி நவீன தொழைில்நுட்ப கைத்தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு அதிகார சபை பெற்றுக்கொண்ட விசேட வெற்றிகளுக்கு இடையே தேங்காய் எண்ணெய் ஆராய்ச்சி முறைகளுக்காக இலங்கையின் தர நிர்ணய சபையினால் ISO 17025 தரச் சான்றிதழ் இவ்வதிகார சபையின் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்பு பிரிவினால் பெற்றுள்ளதைப் பாராட்டுகிறேன்.

2011 ஆண்டுக்கு இணைவாக 2012 ஆண்டில் அதிக உயரிய முன்னெற்றங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ள போதிலும், காணப்பட்ட ஊழியர் பற்றாக்குறை மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் பிரச்சினை, சேவையின் மீது அதிருப்தியடைந்தல் போன்ற மானிட வள முகாமைத்துவ சாவல்களுக்கு மத்தியில் இம்முன்னேற்றத்தினை நோக்கி நிறுவனத்தினை செயற்படுத்த முடிந்தமை விசேட அம்சமாகும். அரச சேவையில் பல்வேறுபட்ட பதவிகளை வகித்த அனுபவங்களைப் பெற்றிருந்த போதிலும், அரச சார் நிறுவனமொன்றில் சேவையாற்றி முதல் ஆண்டுக்குள் இவ்வாறான முன்னேற்றத்தினை எட்ட பங்களிப்பினை வழங்க முடிந்தமையை பெரிதும் பாக்கியமாகக் கருதுகின்றேன். இதற்காக என்னுடன் கைகோர்த்துக் கொண்ட சகோதரப் பணியாளர்களைப் பாராட்டுகிறேன்.

தொடர்ந்தும் எம் பின்னால் இருந்து கொண்டு, எம்மை வழிநடத்தும் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருக்கு நன்றி தெரிவிப்பதுடன், ''கப்ருக்க புறவற'' சிந்தனையினை எட்டுவதற்காக அதிகார சபைக்கு பாரிய பங்களிப்பினை வழங்கிய ஆலோசகர் அருண குணவர்தனவை நினைவுகூர்ந்து நன்றி தெரிவிக்கிறேன்.

எதிர்வரும் 2013 ஆண்டில் இவ்வாண்டைவிட கூடுதலான பங்களிப்புக்களைப் பெறுவதற்கான செயற்பாடுகள் அதிகார சபையினால் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன் கப்ருக்க புறவற செயற்றிட்டத்தின் மூலம் மனைக் கைத்தொழிலாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதைப் போன்று தெங்குக் கைத்தொழிலை புதிய யுகத்திற்கு இட்டுச் செல்லும் அதிகார சபையின் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்குவதே எனது எதிர்பார்ப்பாகும்.

**ஏன்.சீ.சீ.கே பண்டார**
**பணிப்பாளர் நாயகம்**
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

# 2012 ஆம் ஆண்டுக்கான தலைவர் உட்பட பணிப்பாளர் சபை

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. சுகத் ஹந்துன்கே | - | தலைவர் |
| 2. | திரு. பீ. நந்தசேன | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 3. | திரு. டப்.பீ.கே.டப். வெலிவத்த | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 4. | திரு. எச்.ஜீ. சிறிசேன | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 5. | திரு. உபாலி கெட்டிகே | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 6. | திரு. வை.எம். ஜகத் மஞ்சு யாபா | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 7. | திரு. சஞ்ஜீவ தர்மேந்திர குரே | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 8. | திரு. ஆர்.எஸ். வீரமன் | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 9. | பேராசிரியர் எச்.பீ.எம். குணசேன | - | மேற்பார்வை உறுப்பினர் |
| 10. | திருமதி. எஸ்.எம். ராஜகருணா | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் (திறைசேரிப் பிரதிநிதி) |
| 11. | திரு. ஜானக தர்மகீர்த்தி | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் (அமைச்சின் பிரதிநிதி) (2012 மே மாதம் வரை) |
| 12. | திரு. டீ.எம்.எல். பண்டாரநாயக்க | - | பணிப்பாளர் சபை உறுப்பினர் (அமைச்சின் பிரதிநிதி) (2012 ஜூன் மாதம் முதல்) |

# தலைவர் உள்ளிட்ட பிரிவுப் பொறுப்பாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. சுகத் ஹந்துன்கே | - | தலைவர் |
| 2. | திருமதி. என்.என்.சீ.கே. பண்டார | - | பணிப்பாளர் நாயகம் |
| 3. | திரு. ஏ.ரீ. ரணசிங்க | - | பொறியியலாளர் |
| 4. | திருமதி. எஸ்.எஸ். பூரசிங்க | - | பணிப்பாளர் (தர நிர்வாகம் மற்றும் தரப் பாதுகாப்பு) |
| 5. | திரு. ஆர்.ஜே.ஏ. பொன்சேக்கா | - | பணிப்பாளர் (விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி) |
| 6. | திருமதி. எஸ்.எஸ். ராஜகருணா | - | பணிப்பாளர் (நிர்வாகம்) |
| 7. | திருமதி. சந்தியா காந்தி | - | பணிப்பாளர் (நிதி) |
| 8. | டப்.எல்.டப்.கே. லியனகே | - | பதில் பணிப்பாளர் (செயற்பாட்டு அபிவிருத்தி) |
| 9. | திரு. என்.எம். ஆரியதாச | - | உள்ளகக் கணக்காய்வாளர் |

# 2012.12.31 ஆந் திகதியன்று ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு




**குறுகிய உள்ளீடுகள்**

1. சி.முகா. - சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம்
2. உ./பி. பணிப்பாளர் - உதவி / பிரதிப் பணிப்பாளர்
3. மு. மட் - முகாமைத்துவ மட்டம்
4. உ. கணக்காய்வு உத்தி. - உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்
5. நிர்வாக உத்தி. - நிர்வாக உத்தியோகத்தர்
6. தொ. உத்தி. - தொகை உத்தியோகத்தர்
7. ஆராய்ச்சி உத்தி. - ஆராய்ச்சி உத்தியோகத்தர்
8. கனிஷ்ட முகாமைத்துவ மட்டம்
9. விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி
10. தர நிர். தர. பா - தர நிர்வாகம் மற்றும் தர பாதுகாப்பு

## 2012 ஆம் ஆண்டின் விசேட நிகழ்வுகள்

- ❖ நார்சார்ந்த கைத்தொழில்களை கருத்திற் கொள்ளும் போது கடந்த ஆண்டுகளை விட அரைக்கப்பட்ட தும்புநார் உற்பத்தி ஏற்றுமதி 68% முன்னேற்றத்தினைக் காண்பித்துள்ளது. மேலும் தும்புசார் முடிவுப்பொருள் உற்பத்திக்கான முன்னேற்றங்களை கடந்த ஆண்டுக்கு இணைவாக எட்ட முடிந்தது. இதேவேளை தும்புக் கயிறு, பாரிய கயிறு, தூரிகை உள்ளிட்ட உற்பத்திகள் இவற்றில் பிரதானமானவைகளாகும்.

- ❖ கப்றுக்க உற்பத்தி இல்ல வேலைத்திட்டத்தின் கீழ் 5 உற்பத்தி மத்திய நிலையங்களை நாடு பூராகவும் நிர்மாணிப்பதற்காக பிரதேச ரீதியில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அகற்றப்பட்ட தும்பு மட்டை கைத்தொழில்களுடன் இணைக்கப்பட்டுள்ளமையினால் தூரிகை உற்பத்தி சந்தைக்காக கூடுதலான நிரம்பல்களை மேற்கொள்ள முடிந்துள்ளதுடன் அது 11% ஏற்றுமதி முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது.

- ❖ மனைப் பயன்பாட்டின் போது ஏற்படக்கூடிய கழிவினைக் கட்டுப்படுத்துவதற்காக பிரதேச ரீதியில் மூலப்பொருட்களைச் சேகரிக்கும் பணிகளை மேற்கொண்டு தெங்கு உற்பத்திக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் சகல தரப்பினரையும் அறிவுறுத்துவதற்காக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்வதற்காக தற்போதைய வேலைத்திட்டங்களுக்காக முதற்தடவையாக தேசிய தொலைக்காட்சியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கப்றுக்க நவோதய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.

- ❖ சூழலுக்கு உகந்த தேங்காய் சிரட்டை உலை மற்றும் சிரட்டைகளை சேகரிக்கும் மத்திய நிலையங்களை ஆரம்பிக்கும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப் பட்டுள்ளதுடன் இதற்கிணைவாக ஏற்றுமதி வருமானத்தினை 20% இனால் அதிகரிக்கவும் இவ்வாண்டில் முடிந்தது.

- ❖ தெங்கு சார்ந்த கைத்தொழில், தரம், நவீனமயப்படுத்தலுக்காக இதுவரையில் காணப்பட்ட நிதி முறைமைகளுக்கு மேலதிகமாக கப்றுக்க உற்பத்தி ஊக்குவிப்புக் கடன் யோசனைத் திட்டம் முதற்தடவையாக உள்நாட்டு தெங்குசார்ந்த கைத்தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்த முடிந்தது.

- ❖ தெங்குக் கைத்தொழிலின் பண்புசார் தரத்தினை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்களுக்காக இலங்கை தரப் பணியகத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய புஸ்ரீ தரச் சான்றிதழ் வேலைத்திட்டம் தெங்கு சார்ந்த கைத்தொழில்களுக்காக ஆரம்பிக்கப்பட்டன.

- ❖ கப்றுக்க புறவற, திவிநெகும, தேசத்துக்கு மகுட வேலைத்திட்டங்கள் ஊடாக முழுமையான தொழில்நுட்ப வேலைத்திட்டங்கள் 83 மேற்கொள்ளப்பட்ட 1656 பயனாளிகள் கைத்தொழில்சாலைகளுக்காக அனுப்பப்பட்டனர்.

❖ ஐளுழு சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் பணிகள்

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தர நிர்வாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் வழங்கப்படும் பரிசோதனைகளுக்காக சர்வதேச வரவேற்புக் கிடைக்கக் கூடியவாறு பரிசோதனைப் பணிகளை சரியாக விரிவான அடிப்படையில் கிரமமாக மேற்கொள்வதற்காகவும் ஐளுழு 17025 தரச் சான்றிதழ் இரசாயன கூடங்களுக்கு வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய தேங்காய் எண்ணெய் பரிசோதனை முறைகளுக்காக தர நிர்வாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் இரசாயன பகுப்பாய்வுப் பிரிவினால் இலங்கை தர நிர்ணய சபையினால் வழங்கப்படும் ஐளுழு 17025 தரச் சான்றிதழ், 2012.06.12 ஆந் திகதி கிடைக்கப்பெற்றது.

❖ உள்நாட்டு மற்றும் சர்வதேச தெங்குசார் உற்பத்தி ஊக்குவிப்புப் பணிகள், தெங்குசார்ந்த கைத்தொழில்களின் உற்பத்திக்காக சந்தையினை இனங்காணும் வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் – தேசத்துக்கு மகுட தேசிய கண்காட்சி உட்பட உள்நாட்டு 9 வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்றதுடன் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்ற ளுநயவவடந புகைவ ளுாழற – 2012 வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்பதற்காக இருவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

❖ சூழலுக்குப் பொருத்தமான தெங்கு உற்பத்தியினைப் பயன்படுத்துதல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.

❖ தெங்குப் பயன்பாட்டின் போது ஏற்படக்கூடிய வீணடிப்புக்களைக் குறைப்பதற்காக வாடிக்கையாளர்களை அறிவுறுத்தல் இதன் மூலம் தெங்கு உற்பத்திப் பயன்பாட்டுக்கு மக்களைப் பழக்குவதன் ஊடாக தெங்குக் கைத்தொழில் உற்பத்தியினை மேம்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரிக்க முடியும்.

# பக்கம்

பக்க இலக்கம்

| | |
|---|---|
| செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு | 01 |
| தரநிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு | 02 |
| விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு | 03 |
| நிருவாகப் பிரிவு | 04 |
| நிதிப் பிரிவு | 05 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை | 06 |
| கணக்காய்வாளர் அறிக்கை | 07 |

# 1. செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு

தெங்கு சார்ந்த கைத்தொழில்களுக்காக இயலுமைகள் காணப்படும் மூலப்பொருட்கள் மற்றும் கைத்தொழிலை அறிமுகப்படுத்தல், தெங்கு சார்ந்த கைத்தொழில் விருத்தி, நவீன மயப்படுத்துவதற்காக தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல் மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் அபிவிருத்திகளுக்கு வழிகாட்டல், அபிவிருத்தி வேலைத்திட்டங்களை திட்டமிடல் மற்றும், அமுல்படுத்தல், பொருத்தமான தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம் உற்பத்தி செலவீனத்தைக் கட்டுப்படுத்தல், உற்பத்திகளின் பண்புசார் தரத்தினைப் பேணுவதற்கும், மேம்படுத்துவதற்கும் கைத்தொழில் அபிவிருத்தி அல்லது நவீனமயப்படுத்துவதற்காக புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க தேவையான தொழிலநட்பம் மற்றும் நிதியுதவி (அரச வங்கி, கடன் நிவாரணம் மூலம் ) வழங்குதல், பெறுமதி கூடிய புதிய உற்பத்திகளை மேற்கொள்வது தொடர்பில் கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தல் / கைத்தொழில் பரவலாக்கல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் சந்தையின் தேவைக்கு ஏற்றவாறு உற்பத்திகளை மேற்கொள்ளுதல் தெங்கு சார்ந்த மனைக் கைதொழில்களை மேம்படுத்தல் சுயதொழில் வாய்ப்புகளுக்காக தேவையான தொழில்நுட்ப அறிவுகளை வழங்குதல் போன்றவற்றுக்காக தேவையான ஊக்குவிப்புக்கள், அறிவுறுத்தல் செயற்பாடுகளை விருத்தி செய்யும் பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் பிரதான செயற்பாடுகளாகும்.

2012 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டங்களுக்கு அமைய அமுல்படுத்தப்பட்ட பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1.1 செயற்பாட்டுப் பிரிவுகளை பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை

1.2 நுண்ணுயிரியல் ஆய்வு மற்றும் பௌதிக பண்புசார் தரத்தினை உறுதிப்படுத்தல் மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் தர நிருவாகச் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

1.3 கப்ருக்க எழுச்சித் திட்டத்தின் ஊடாக தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உள்நாட்டு கைத்தொழில்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல்.

(அ) கப்ருக்க உற்பத்தி இல்ல மத்திய நிலையங்களை ஆரம்பித்தல்.

(ஆ) பண்புசார் தரமிக்க உற்பத்திகளை மேற்கொள்ளும் தெங்கு சார்ந்த கைத்தொழிலுக்காக சிறந்த உற்பத்திகளை பயன்படுத்த அறிமுகப்படுத்தல் மற்றும அமுல்படுத்தல்.

(இ) தெங்கு சார்ந்த கைத்தொழில்களை ஆரம்பித்தல் / அமுலிலுள்ள கைத்தொழில் விருத்திக்காக தேவையான தொழில்நுட்ப அறிவினை வழங்குதல்.

(இ) தேங்காய் சிரட்டை மற்றும தேங்காய் மட்டை சேகரிக்கும் கைத்தொழில்களில் ஈடுபடல்.

(உ) கப்ருக்க உற்பத்தி ஊக்குவிப்பு நிவாரண கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தல்.

(ஊ) மகளிர் தொழில் முயற்சி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.

(எ) கப்ருக்க நிலையத்திற்காக நிதிப் பங்களிப்புகளை பெற்றுக் கொள்ளல்.

1.4 ஆலை அபிவிருத்தி நிதியத்தின், நிதி, அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்குதல்..

1.5 தும்பு மற்றும் தும்பு சார்ந்த கைத்தொழில்களை நவீனமயப்படுத்தலும், தரப்படுத்தலும்.

1.6 மனைப் பயன்பாட்டின் போது வீணாக்கப்படுவதினை குறைத்தல் மற்றும் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் மற்றும் தெங்கு உற்பத்தி தொடரபாக சகல தரப்பினரையும் அறிவுறுத்தல்.

1.7 புதிய தொழில்நுட்ப அறிமுகப்படுத்துவதன் மூலம் கைத்தொழில் அபிவிருத்தி

1.8 தொழில்நட்ப பரிமாற்றல் மற்றும் சேவை பங்களிப்புகளை பன்முகப்படுத்தல்.

1.9 தும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் சேவை பங்களிப்பு

1.10 திவிநெகும திட்டத்தினூடாக கிராமிய தெங்கு கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவுதல்.

1.11 தேசத்திற்கு மகுட தேசிய வேலைத்திட்டத்திற்காக தெங்கு சார்ந்த கைத்தொழில் நோக்கிற்கான பங்களிப்புக்கள்.

## 1.1 செயற்பாட்டுப் பிரிவினை பதிவு செய்தலும் மேற்பார்வையும்.

2012 ஆம் ஆண்டில் உலர்த்திய தேங்காய், கொழுப்பு ஒரளவு நீக்கப்பட்ட உலர்த்திய தேங்காய் (PDDC) , தேங்காய் பால் மற்றும் அது சார்ந்த உற்பத்தி, தேங்காய் எண்ணெய், கொப்பரா, பானம் சார்ந்த உற்பத்திகள், தும்பு மற்றும் தும்பு நார் சார்ந்த முடிவுப் பொருள் உற்பத்தி, தேங்காய் சிரட்டை, நிலக்கரி, காபன் உற்பத்தி மற்றும் தேங்காய் சிரட்டை சார்ந்த அலங்கார கைப்பணிப் பொருள் உற்பத்தி கைத்தொழில்கள் 307 அதிகார சபையில் பதிவு செய்து கொண்டுள்ளது.

| உற்பத்தி | **2011 ஆண்டில் பதிவு செய்து கொண்ட உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை** | **2012 ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|---|
| | | புதிய பதிவு | பழைய பதிவு | முழுப் பதிவு |
| உலர்த்திய தேங்காய் உற்பத்தி | 49 | - | 51 | 51 |
| கொழுப்பு ஓரளவு நீக்கப்பட்ட உலர்த்திய தேங்காய் | 7 | - | 4 | 4 |
| தேங்காய் பால் உற்பத்தி | 7 | - | 5 | 5 |
| தேங்காய் எண்ணெய் உற்பத்தி | 44 | 10 | 34 | 44 |
| கொப்பரா உற்பத்தி | 28 | - | 20 | 20 |
| தும்புநார் உற்பத்தி | 121 | 21 | 109 | 130 |
| தும்புநார் சார்ந்த முடிவுப் பொருள் உற்பத்தி | 36 | 10 | 25 | 35 |
| தேங்காய் சிரட்டை நிலக்கரி உற்பத்தி | 2 | | 2 | 2 |
| காபன் உற்பத்தி | 7 | | 7 | 7 |
| தேங்காய் சிரட்டை சார்ந்த அலங்கார உற்பத்திப் பொருட்கள். | 13 | - | 7 | 7 |
| தேங்காய் பால் சார்ந்த உற்பத்திகள் | - | 2 | - | 2 |
| **மொத்தம்** | **314** | **43** | **264** | **307** |

*அட்டவணை 1- 2011 மற்றும் 2012 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தி நிறுவனங்கள்.*

இவ்வாண்டில் உலர்த்திய தேங்காய் மெற்றித் தொன் 41647 உற்பத்தி செய்யப்படுவதுடன் அதற்கு 51 ஆலைகள் பங்களிப்பு செய்கின்றன. நுண்ணுயிரியல் மற்றும் பௌதீக பண்புசார் தரப் பகுப்பாய்வுக்காக செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவினால் இவ்வுற்பத்திகள் மூலம் மாதிரிகள் பெறப்பட்டு அனுப்புதல் உட்பட கைத்தொழிற்சாலைகள் மேற்பார்வைகள் செய்யப்பட்டன.

**உலர்த்திய தேங்காய் உற்பத்தி (மெ.தொன்) - 2011 மற்றும் 2012**




2012 ஆம் ஆண்டில் உலர்த்திய தேங்காய், தேங்காய் பால் மற்றும் அது சார்ந்த உற்பத்தி, கொப்பரா எண்ணெய், தும்புநார் மற்றும் தும்பு சார்ந்த முடிவுப் பொருள் உற்பத்தி உட்பட தெங்குசார் உற்பத்தி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட வெளிகள சுற்றுலா, பரிசோதனை மற்றும் மாதிரிகளைப் பெற்ற தடவைகளின் எண்ணிக்கை 10419 ஆகும். உலர்த்திய உற்பத்திகளின் நுண்ணுயிரியல் மற்றும் பௌதீக பண்புசார் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக கப்பல் ஏற்றுபவர்கள் களஞ்சியம் மற்றும் குதங்களை பரிசோதனை செய்வதற்காக 12 வெளிக்களச் சுற்றுலாக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது 521 தேங்காய் பொதிகள் மாதிரகள் பெற்று பகுப்பாய்வுக்காக இரசாயன கூடத்திற்கு அனுப்பப்பட்டது.

## 1.2 நுண்ணுயிரியல் மற்றும் பௌதீக பண்புசார் தரச் சான்றிதழை வழங்குதல்

- **உலர்த்திய தேங்காய்க்கான தர உறுதிச்சான்றிதழை வழங்குதல்.**

சகல உலர்த்திய கைத்தொழிற்சாலைகளிலும் நாளாந்த உற்பத்திகள் அதிகார சபையின் பரிசோதகரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகள் இரசாயனகூட பரிசோதனையின் பின்னர் வழங்கப்படும் பெறுபேறுகளுக்கு அமைய இதன் தரம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட உலர்த்திய தேங்காய் மெற்றித் தொன் 41647 நாளாந்தம் மாதிரிகள் 9393 நுண்ணுயிரியல், பௌதீக மற்றும் விசேட மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. உலர்த்திய தேங்காய் .17,388,810 கிலோ கிராமிற்காக 1738 தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

| மாதம் | தரச் சான்றிதழ்களை வழங்குதல் | | | | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|
| | சலமொனல்லா | பௌதீக தரம் | $SO_2$ | எப்லடொக்சிம் | |
| ஜனவரி | 104 | 104 | - | - | 208 |
| பெப்ரவரி | 96 | 96 | - | - | 192 |
| மார்ச் | 83 | 83 | 5 | 5 | 176 |
| ஏப்ரல் | 65 | 65 | 8 | 7 | 145 |
| மே | 66 | 66 | 8 | 8 | 148 |
| ஜூன் | 61 | 61 | 14 | 14 | 150 |
| ஜூலை | 70 | 70 | 11 | 13 | 164 |
| ஆகஸ்ட் | 62 | 62 | 6 | 5 | 135 |
| செப்டம்பர் | 65 | 65 | 10 | 7 | 147 |
| ஒக்டோபர் | 45 | 45 | 9 | 8 | 107 |
| நவம்பர் | 36 | 36 | 9 | 7 | 88 |
| டிசெம்பர் | 35 | 35 | 5 | 3 | 78 |
| **மொத்தத் தொகை** | **788** | **788** | **85** | **77** | **1738** |

**அட்டவணை 2 – 2012 வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை**

- **பகுப்பாய்வு சான்றிதழ் /அறிக்கைகளை வழங்குதல்.**

கொள்வனவளார்களின் கோரிக்கைக்கு அமைய ஓரளவு கொழுப்பு நீக்கப்பட்ட தேங்காய், (PDDC), கொப்பரா, தேங்காய் எண்ணெய், தூய தேங்காய் எண்ணெய், , (Virgin Coconut Oil), பின்னாக்கு, தும்புநார், தும்பு துகல் சார்ந்த உற்பத்திகள், உலர்த்திய தேங்காயின் விசேட மாதிரி, பார உலோகம், உலர்த்திய தேங்காய்களின் முழுமையான பருமனைப் பரிசோதனை இடல் போன்றவற்றுக்காக இரசாயன பகுப்பாய்வுகளின் பெறுபெறுகளை அடிப்படையாகக் கொண்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டு பகுப்பாய்வு சான்றிதழ்கள் 840 வெளியிடப்பட்டுள்ளன. அதன் விளக்கமான குறிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| பரிசோதனை செய்யும் முறை | விண்ணப்பபடிவம் பெற்றுக் கொண்ட மாதிரிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட பகுப்பாய்வுகளின் சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| உலர்த்திய தேங்காய்களின் விசேட மாதிரிகள் | 90 | 90 |
| கொழுப்பு ஓரளவு நீக்கப்பட்ட உலர்த்திய தேங்காய் | 95 | 95 |
| கொப்பரா | 14 | 14 |
| தேங்காய் எண்ணெய் | 62 | 62 |
| தூய தேங்காய் எண்ணெய் | 24 | 24 |
| தும்புநார் மற்றும் தும்பு துகல் சார்ந்த உற்பத்தி | 123 | 123 |
| பின்னாக்கு | 33 | 33 |
| உலர்த்திய தேங்காய்களின் பருமனை பரிசோதித்தல். | 311 | 311 |
| நீரில் அடங்கும் பார உலோகம். | 88 | 88 |
| **மொத்தம்** | **840** | **840** |

**அட்டவணை டவணை 3- 2012 ஆண்டில் பகுப்பாய்வு சான்றிதழ்களின் எண்ணிக்கை**

## 1.3 கப்ருக்க எழுச்சியின் வியூகங்கள் மூலம் தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த கைத்தொழில்களை மேற்கொள்ளல்.

இலங்கையின் தேங்காய் செய்கையினை விருத்தி செய்தல் மற்றும் உயர்ந்தபட்ச அறுவடையினை இலக்காகக் கொண்டு பல்வேறுபட்ட வியூகங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதன் உயர்ந்தபட்ச அறுவடையினைப் பெற்று தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த கைத்தொழில்களை உருவாக்குதல், அமுலிலுள்ள கைத்தொழில அபிவிருத்தி, பெறுமதி அதிகரித்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கு தொழில் முயற்சியாளர்களை அறிவுறுத்தல் மற்றும் கைத்தொழில்களை ஆரம்பிக்க உதவுதல், பண்புசார் தரமிக்க உற்பத்திகளை மேற்கொள்ளும் முக்கியத்துவம் மற்றும் அவ்வுற்பத்திகளை மேற்கொள்ள தேவையான உதவிகளை வழங்குதல், கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக மனைக் கைத்தொழிலை உருவாக்குவதற்கு உதவுதல் மற்றும் சுயதொழில் வாய்ப்பாக தெங்கு சார்ந்த கைப்பணி மற்றும் அலங்காரப் பொருள் உற்பத்திகளை மேற்கொள்வது தொடர்பான அறிவுறுத்தல் ஆகிய பணிகளை அமுல்படுத்தும் நோக்குடன் 2012ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- **கப்ருக்க உற்பத்தி இல்ல மத்திய நிலையங்களை ஆரம்பித்தல்.**

அமைச்சின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய கப்ருக்க புறவற வேலைத் திட்டத்தின் கீழ், உற்பத்தி இல்ல மத்திய நிலையங்களைத்

தாபிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக தெங்கு சார்ந்த கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான பிரதேசங்களை இனங்காண்பதற்கும், அப்பிரதேசங்களில் தற்போது மூடப்பட்ட அரச கட்டங்களைப் பயன்படுத்தி, மத்திய நிலையங்களைத் தாபிப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இது தொடர்பில் தெங்கு கைத்தொழில் துறை சார்ந்த உரிய தரப்பினர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், இதன் போது கைத்தொழிலாளர்களினால் ஏற்றுமதி உற்பத்திகளை மேற்கொள்ளும் போது பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களைப் பயன்படுத்தும் போது எழக்கூடிய சிரமங்கள், மூலப்பொருள் தேவைகளை நிவர்த்தி செய்தல் மற்றும கொண்டு செல்லும் போது ஏற்படக் கூடிய சிரமங்கள் குறித்தும் அறிவிக்கப்பட்டது. இப்புதிய வேலைத்திட்டத்தின் மூலம் அதற்கு தீர்வு காணப்பட இருப்பதனால், அதனுடன் இணைந்து கொள்ளுமாறு கைத்தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படடன.

இது தொடர்பில் பன்னல, நீர்கொழும்பு, இப்பாகமுவ, முலடியன, கொடகவெல, திவுலபிட்டிய, மடுல்ல, மற்றும் சியம்பலாண்டுவ ஆகிய பிரதேசங்களில் தகைமைகள், மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட இடங்களில் மூடப்பட்டுள்ள அரச கட்டடங்களின் உற்பத்தி இல்லங்களை நிர்மாணிக்க கீழ் குறிப்பிட்டப்பட்ட இடங்கள் பொருத்தமடானது என இனங்காணப்பட்டன.

1. கொடுவெல்ல ஆரம்ப கல்லூரி - பன்னல பிரதேச செயலாளர் பிரிவு
2. இஹல நெல்லிய ஆரம்ப கல்லூரி - இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவு
3. கல்எடுப கனிஷ்ட கல்லூரி - முலடியன பிரதேச செயலாளர் பிரிவு
4. மாவதலந்த கல்லூரி - கொடகவெல பிரதேச செயலாளர் பிரிவு
5. குளிகெதர ஆரம்ப கல்லூரி - திவுலபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு
6. நாகஹமட பொது கட்டட மத்திய நிலையம் - மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவு

இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்தும் போது தெங்கு அபிவிருத்தி அதிகார சபை கீழ் குறிப்பிட்ட வெலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென இனங்காணப்பட்டன.

1. மத்திய நிலையத்திற்காக கட்டத்தை வழங்குதல்.
2. இயந்திர உபகரணங்களை வழங்குதல்.
3. மின்சாரம், நீர் போன்ற ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
4. தொழில்நுட்ப அறிவினை வழங்குதல் அல்லது அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதால்
5. பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.
6. செய்றறிட்டத்தை முன்னெடுக்கும் போது தொடர்ந்தும் தேவையான அடிப்படைய வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்துதல்.

உற்பத்தி நிலைய மத்திய நிலையங்களை தாபிப்பதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், மற்றும் கட்டங்களைப் பழுதுபார்ப்பதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக அதிகார சபையினால் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டன.

இதற்கமைய,

- கொடகவெல மவாதலந்த கல்லூரியின் உட்கட்டமைப்பு வதசிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு பூர்த்தி செய்யப்பட்டது. இதற்காக ருபா 1.376 மில்லியன் செலவிடப்பட்டது.

- திவுலபிட்டிய குளிகெதர ஆரம்ப கல்லூரியை தாபிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக ரூபா 1.839 செலவிடப்பட்டது. (இவ்விரு மத்திய நிலையங்களுக்காக மின்சாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் கப்ருக்க சங்க அங்கத்தவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களைத் தொடர்புபடுத்தியதன் பின்னர் உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- பன்னல கொடுவெல்ல ஆரம்ப கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக தேறிய மதிப்பீடு செலவினத்தில் (50%) ருபா 2.215 செலவிடப்பட்டுள்ளது. அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இப்பாகமுவ நெல்லிய உற்பத்தி மத்திய நிலையம் ருபா. 2.144 செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது இம்மத்திய நிலையத்தினால் தூரிகை உற்பத்தி செய்யப்படுகின்றன.

- மடுல்ல நகஹமட உற்பத்தி நிலையத்தின் மத்திய நிலையத்தில் 2012 நவம்பர் 25ஆம் தொடக்கம் தூரிகை உற்பத்திப் பணிகள் கௌரவ அபிவிருத்தி தெங்கு மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக தேவையான தொழில்நட்பம் மற்றும் இயந்திரங்களைப் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.




*மடுல்ல நிபயும் பியச மத்திய நிலையத்தில் தூரிகை உற்பத்தி*

இதற்கு மேலதிகமாக வஹரகொட தும்பு சார்ந்த உற்பத்திப் பிரிவும், கப்ருக்க உற்பத்தி இல்ல யோசனைத் திட்டத்திற்கு அமைய புதிய தொழில் முயற்சியின் கீழ் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதுடன், பட்டியவெலகொட பிரதேசத்தில் உற்பத்தி இல்ல மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டு உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

2013 ஆண்டில் எதிர்காலச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

- **பண்புசார் தரமிக்க உற்பத்திகளை மேற்கொள்ளும் நோக்கும் தெங்கு சார்ந்த கைத்தொழில்களுக்காக சிறந்த உற்பத்திப் பயன்பாடு (GMP) அறிமுகப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல்.**

தெங்கு சார்ந்த உற்பத்தியின் பண்புசார் தரம் மற்றும் உரிய தரங்களை முன்னெடுத்து சந்தையில் போட்டிகரமான நிலைமைக்கு ஏற்றவாறு உற்பத்திகளை மேற்கொள்ளத் தேவையான சிறந்த உற்பத்திப் பயன்பாடுகள் **(GMP)** அறிமுகப்படுத்தி, அவற்றை கைத்தொழில் சார்ந்த நிறுவனத்திற்குள் அமுல்படுத்தும் பணிகள் 2012ஆம் அண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் உலர்த்திய தேங்காய், கொப்பரா மற்றும் தேங்காய் எண்ணெய், தேங்காய் பால் மற்றும் அது சார்ந்த உற்பத்தியும் தும்பு மற்றும் தும்பு சார்ந்த முடிவுப்பொருள் உற்பத்தி கைத்தொழிலாளர்களுக்கு இலங்கை தர நிறுவகத்தினால் அமுல்படுத்தும் சிறந்த உற்பத்தி பயன்பாடுகள் தொடர்பில் அறிவுறுத்தும் வேலைத்திட்டம் கௌரவ தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி கௌரவ அமைச்சர் தலைமையில் நடத்தப்பட்டது.



தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் இலங்கை தர நிறுவன பணிப்பாளர் நாயகம் கையெப்பமிடுதல்.

இதற்கமைய கீழ் குறிப்பிடப்பட்ட கைத்தொழில்கள் மூலம் GMP உறுதிப்பாட்டுச் சான்றிதழ்களுக்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| உலர்த்திய தேங்காய் | - | 33 |
| கொப்பரா மற்றும் தேங்காய் எண்ணெய் | - | 7 |
| தேங்காய் பால் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் | - | 2 |
| தும்பு மற்றும் தும்பு சார்ந்த முடிவுப் பொருள் உற்பத்திகள் | - | 11 |
| | | 53 |

விண்ணப்பபடிவங்கள் சமர்ப்பிக்கப்பட்ட 48 கைத்தொழிற்சாலைகள், முதலாவது கணக்காய்வுக்காக அனுப்பப்பட்டதுடன், அதில் இரண்டு கணக்காய்வுக்காக யோசனை தெரிவிக்கப்பட்ட நிறுவனத்தினால் 6 நிறுவனங்களில் இரண்டாவது கணக்காய்வுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. இது 2013ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வேலைத்திட்டமாகும்.

- **தெங்கு சாரந்த கைத்தொழில்களை ஆரம்பித்தல். / அமுலிலுள்ள கைத்தொழில் அபிவிருத்திக்காக தேவையான தொழில்நுட்ப அறிவினை வழங்குதல்.**

தெற்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவினை வழங்குமாறு கப்ருக்க சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அப்பிரதேசங்களில் காணப்படும் மூலப்பொருட்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ளப்படும் இயலுமை, உற்பத்திக்கான சந்தை வாய்ப்புக்கள் மற்றும் விற்பனை ஆகிய விடயங்களைக் கருத்திற் கொண்டு நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| இல | பயிற்சி வேலைத்திட்டம் | பிரதேச செயலங்களின் எண்ணிக்கை | பயிற்சி வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | தெங்கு நார் உற்பத்தி | 03 | 04 | 97 |
| 2. | துடைப்பக உற்பத்தி | 09 | 12 | 223 |
| 3. | ஈர்க்கில் கட்டு, தும்புத்தடை உற்பத்தி | 15 | 18 | 425 |
| 4. | தும்புத்தடை மற்றும் தூரிகை உற்பத்தி (பெண்கள்) | 01 | 01 | 15 |
| 5. | தேங்காய் சிரட்டை சார்ந்த உற்பத்தி | 09 | 13 | 183 |
| 6. | ஈர்க்கு சார்ந்த உற்பத்தி | 02 | 02 | 35 |
| 7. | தேங்காய் சிரட்டை நிலக்கரி உற்பத்தி | 01 | 01 | 45 |
| 8. | ஓலை சார்ந்த உற்பத்தி | 03 | 03 | 55 |
| 9. | தூரிகை உற்பத்தி | 06 | 06 | 115 |
| 10. | கயிறு உற்பத்தி | 03 | 04 | 88 |
| 11. | தேங்காய் எண்ணெய் உற்பத்தி | 02 | 02 | 34 |
| 12. | தேங்காய் நார் உற்பத்தி | 02 | 02 | 41 |
| 13. | தும்புத்தடி உற்பத்தி | 02 | 02 | 43 |
| 14. | தூரிகை உற்பத்தி | 01 | 01 | 13 |
| 15 | பலகார உற்பத்தி (பெண்) | 05 | 05 | 93 |
| 16 | கொப்பரா | 01 | 01 | 13 |
| **மொத்தம்** | | | **76** | **1518** |

**அட்டவணை 4- பயிற்சி வேலைத்திட்டம்**

- **தேங்காய் சிரட்டை மற்றும் தேங்காய் மட்டை சேகரித்து கைத்தொழில்களக்காகப் பயன்படுத்தல்.**

பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படாத வீணாக்கப்படும் தெங்கு சார்ந்த மூலப்பொருட்களை இனங்கண்டு கைத்தொழில்களுக்காகப் பயன்படுத்தும் நோக்கும் தேங்காய் சிரட்டை மற்றும் தேங்காய் மட்டைகளை சேகரிக்கும் மத்திய நிலையங்களைத் தாபிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கமைய, தேங்காய் சிரட்டைகளைத் சேகரிக்கும் 47 மத்திய நிலையங்கள் மூலம் . 842,760

கிலோ கிராம் தேயிலை சிரட்டை மற்றம் தேயிலை மட்டைகளைச் சேரிக்கும் 14 மத்திய நிலையங்கள் மூலம் தேங்காய் மட்டைகள் 2,765,400 சேகரிக்கப்பட்டது. இதன் போது தேங்காய் சிரட்டை நிலக்கரி உற்பத்திக்கு ஆர்வம் காண்பிப்பவர்கள் மட்டும் தேங்காய் மட்டை சார்ந்த கைத்தொழில்களை மேற்கொள்ள விரும்புவோருக்கு தேவையான தொழில்நுட்ப அறிவு நிதி நிவாரணத்தை வழங்குவது தொடர்பில் அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **கப்ருக்க உற்பத்தி ஊக்குவிப்பு நிவாரண கடன் யோசனைத் திட்டத்தை அமுல்படுத்தல்.**

தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தி நவீன மயப்படுத்தல் மற்றும் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக தேவையான மூலதனத்தினை பெற்றுக் கொள்வதற்கு உதவும் நோக்கில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மக்கள் வங்கியுடன் இணைந்து ஆறு சதவீத சலுகை நிவாரண அடிப்படையில் 25 விண்ணப்பதாரிகளுக்காக 16.615 மில்லியன் ருபா கடன் நிதி வழங்கப்பட்டுள்ளது.
இதற்கு மேலதிகமாக மேலும் 51 விண்ணப்பதாரிகள் கடன் பெறுவதற்கு தகைமை பெற்றிருந்தனர்.



**கேளரவ தெங்கு அபிவிருத்தி மற்றும்** மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் அமைச்சின் செயலாளர், தெங்கு செய்கையாளர் சபையின் பணிப்பாளர் மற்றும் இவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளின் முன்னிலையில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் உரிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

- **மகளிர் தொழில் முயற்சி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.**

பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளாத தெங்கு சார்ந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தெங்கு சார்ந்த பெறுமதியினை அதிகரித்து கூடுதலான உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடிய சுயதொழில் வாய்ப்புக்களை முன்னெடுத்து கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக தெங்கு சார்ந்த பலகாரங்களைத் தயாரித்தல், ஈர்க்கில், தென்னம் ஓலை, தும்பு சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நட்ப அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டள்ளதுடன், இவ்வாண்டில் கீழ் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

| பயிற்சி வேலைத்திட்டம் | வேலைத் திட்டங்களின் எணிணக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| இனிப்பு வகை உற்பத்தி | 5 | 93 |
| ஈர்க்கில் கட்டு மற்றும் தூரிகை உற்பத்தி | 1 | 15 |
| ஈர்க்கில் சார்ந்த அலங்கார உற்பத்தி | 1 | 30 |
| மொத்த எண்ணிக்கை | 7 | **138** |

**அட்டவணை 5- மகளிர் பயிற்சி வேலைத்திட்டம்**

- **கப்ருக்க நிலையத்திற்காக நிதிப் பங்களிப்பை வழங்குதல்.**

2005 இலக்கம் 31 கொண்ட கப்ருக்க சட்டத்தின் கீழ், தாபிக்கப்பட்டுள்ள கப்ருக்க நிதியம் அமுல்படுத்தப்படுவதுடன், தெங்கு பயிர்ச் செய்கை சபைத் தலைவரின் உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் இந்நிதியத்தின் முகாமைத்துவ சபையின் தலைவராக செயற்படுவதுடன், நிருவாக சபையின் ஏனைய அங்கத்தவர்களாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், மற்றும் பணிப்பாளர் நாயகம், தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் உட்பட, தெங்கு செய்கை சபையின் பொது முகாமையாளர், பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார். முதலாவது முகாமைத்துவக் கூட்டத்தில் இந்த நிதியத்தினை ஆரம்பிக்கும் போது 3 நிறுவனங்களினால் பத்து இலட்சம் ருபா விகிதம் பயன்படுத்தி, ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய, 2012ஆம் ஆண்டுக்கு செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் ரூபா 10 மில்லியன் ருபா நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.

## 1.4 ஆலை அபிவிருத்தி நிதியத்தின் நிதி, அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்குதல்.

உலர்த்திய கைத்தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு சிறந்த உற்பத்தி பழக்கங்கள் தர உறுதிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக செலவாகும் செலவீனத்தை ஆலை அபிவிருத்தி நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்ள கைத்தொழிலாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இவ்வுறுதிப்படுத்தல் ஊடாக வெளிநாட்டு சந்தைக்கு பண்புசார் தரமிக்க உற்பத்திகளை சமர்ப்பிக்க முடிவதுடன், இலங்கையின் உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடிந்தள்ளது.

## 1.5 தும்பு மற்றும் தும்பு சார்ந்த கைத்தொழில்களை நவீனமயப்படுத்தலும், தரப்படுத்தலும்.

தெங்கு கைத்தொழில்கள் மூலம் வருடாந்தம் அன்னியநாட்டு செலாவணி உழைப்பினைக் கருத்திற் கொள்ளும் போது தும்பு மற்றும் தும்பு சார்ந்த உற்பத்திகளினால் ஈட்டப்படும் அன்னியநாட்ட செலாவணிகள் அதிஉயரிய மட்டத்தில் காணப்படுகின்றது. சர்வதேச சந்தையில் இயற்கை மூலப்பொருட்களைப் பயன்படுத்தி

மேற்கொள்ளப்படும் உற்பத்திகளுக்காக சிறந்த விலை காணப்படுகின்றது. எனவே, தும்புக் கைத்தொழில்களை ஏற்படுத்தல், பொருத்தமான மூலப்பொருட்களைத் தேர்ந்தெடுத்தல், பண்புசார் தரமிக்க உற்பத்திகளை மேற்கொள்ளல், உற்பத்திகளைப் பொதியிடல், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து ஆகிய விடயங்கள் கொண்ட சட்ட ஒழுங்குவிதிக் கோவைகளை அமுல்படுத்தும் தேவையினை அதிகார சபை இனங்கண்டுள்ளதுடன், அதற்கு இலங்கை தர நிறுவகத்தின் பங்களிப்பு முறைகளை வகுக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 1.6 மனைப் பயன்பாட்டின் போது ஏற்படும் வீணாக்குவதனை கட்டுப்படுத்தல் மற்றும் புதிய உற்பத்திகளின் அறிமுகப்படுத்தல் மற்றும் தெங்கு உற்பத்தி தொடர்பான சகல தரப்பினரையும் அறிவுறுத்தல்.

தெங்கு மற்றும் தெங்கு கைத்தொழில்கள் தொடர்பாக மக்களை அறிவுறுத்தல், மனைப் பயன்பாட்டின் போது ஏற்படக் கூடிய வீணாகுவதை கட்டுப்படுத்தல், தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த பெறுமதி கூடிய உற்பத்திக்காக கைத்தொழிலாளர்-களை அறிவுறுத்தல், கப்ருக்க எழுச்சி வேலைத்திட்டம் தொடர்பாக மக்களை அறிவுறுத்தல், கைத்தொழிலின் பலம் மற்றும் முதலீட்டுச் சந்தர்ப்பங்களைக் காண்பித்து ஊக்குவிப்பு வேலைத் திட்டங்களாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் அறிக்கை சார்ந்த நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்புவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.



*கௌரவ தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை ரூபவாஹினி கூமட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோருக்?கு இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடல் மற்றும் இந்நிகழ்ச்சில் தெங்கு அபிவிருத்தி மறட்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி செயலாளரன் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பளரும் நாயகமும் பங்கேற்றார்.*

## 1.7 புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் கைத்தொழில் அபிவிருத்தி.

- தெங்கு செய்கையில் 20% மான நிலப்பரப்பு தென் மாகாணம் மற்றும் இரத்தினபுரி மொனராகலை ஆகிய மாவட்டங்களில் விரிவடைந்து காணப்படுவதுடன், அப்பிரதேசங்களிலுள்ள தேங்காய், தெங்கு முக்கோணத்திலுள்ள உலர்த்திய கைத்தொழிற்சாலைக்கு விற்பனைக்காக நாளாந்தம் கொண்டு செல்ல முடிந்துள்ளது. இதற்கமைய, பிரசுரிக்கப்படும் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இரு தொழில் முயற்சியாளர்களின் அம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் கைத்தொழிற்சாலையினை ஆரம்பிப்பதற்கு செயற்றிட்ட அறிக்கைகளைச் சமர்ப்பிக்க தொழில் முயற்சியாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

- தும்பு கைத்தொழிலில் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி புதிதாக தும்பு உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. பாரம்பரிய செயற்பாடுகளை மேற்கொண்டு தும்பு

மட்டைகளை பயன்படுத்துவதில், பாதிப்புக்கள் இருப்பதனால், அதற்காக பயிற்சி பெற்ற ஊழியர்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இப்பிரச்சினை தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ளதுடன், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தினால் விருத்தி செய்யப்பட்ட இயந்திர செயற்பாடுகள் தும்பு சார்ந்த உற்பத்திகளுக்காக பொருத்தமானது என்பதனால் இனங்காணப்பட்ட 5 இடங்களில் பொருத்துவதற்காக இயந்திரம் சார்ந்த 5 உபகரணங்கள் இந்நிறுவனத்தினால் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- தேங்காய் சிரட்டைகளை பயன்படுத்தி, நிலக்கரி தயாரிக்கும் சம்பிரதாயக் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இச்செயற்பாடுகள் மூலம் காபனீரொட்டை மற்றும் காபன் மொனொக்சைட் சூழலுக்கு வெளியிடப்படுகின்றது. இதனால், சூழலுக்கு உகந்த கைத்தொழிலாகப் பேணுவதற்காக நீண்டகாலகமாக ஆராய்ச்சிகள் மேற்கொளள்ப்பட்டதுடன், தற்போது பயன்மிக்க இரண்டு முறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

1. விருத்தி செய்யப்பட்ட சம்பிரதாய முறைகள்
2. உலை முறைகள்

இம்முறைகளை அமுல்படுத்தும் போது எதிர்கொள்ள வேண்டி எற்படும் பிரயோகப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை திருத்தியமைப்பதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக இப்பிரிவு தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## 1.8 தொழில்நுட்ப பரிமாற்றல் மற்றும் சேவைப் பங்களிப்புக்களை பன்முகப்படுத்தல்.

பிரதான அலுவகத்தின் மையப்படுத்தப்பட்டுள்ள சேவைகள் தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த கைத்தொழில்கள் காணப்படும் பிரதேசங்களுக்கு அனுப்பி சேவைகளைப் பயன்முகப்படுத்தும் நோக்கும் பிரதேச அலுவலகங்கள் தாபிக்கப்பட்டன. இதன் மூலம் அப்பிரதேசங்களில் வாழும் கைத்தொழில் தரப்பினருக்கு பாரிய வசதிகள் கிடைப்பதுடன், அவர்களின் கைத்தொழில் தொடர்பான பிரச்சினைகள் மற்?றும் அது சார்ந்த தேவைகளை மேற்கொள்ள முடிந்துள்ளது. கப்ருக்க புறவற வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஆய்வு, புள்ளிவிபரங்களைச் சேகரித்தல், தொழில் நுட்பபயிற்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் நடாத்துதல், தேசிய மட்டத்திலான கண்காட்சி மற்றும் செயலமர்வுகளுக்காக சேவைப் பங்களிப்புக்களை வழங்குதல் போன்ற பிரதேச அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகளாகும்.

## 1.9 தும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைப் பங்களிப்புக்கள்.

தும்பு சார்ந்த கைத்தொழில்களுக்கு உரியதான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், சுடுநீரைப் பயன்படுத்தி தேங்காய் மட்டைகளை ஊர வைக்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்துவது தொடர்பில் ஆராய்ச்சிகள்

மேற்கொள்ளப்படுவதுடன், தற்போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கை 80% பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் தும்பு உற்பத்தி தொடர்பான அறிவினை வழங்குதல்/ வினைத்திறன் மிக்க உற்பத்தியினை மேற்கொள்ளுதல். காணப்படும் பிரச்சினைகளுக்காக தீர்வுகளை வழங்குதல் என்ற தொனிப்பொருளில் 6 பயிற்சி வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிறுவனங்கள் மற்றும் சக்திவள அதிகார சபையுடன் இணைந்து மின்சக்தியினை சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பில் தும்புக் கைத்தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தும் செயற்பாடும் வழங்கப்பட்டது.

## 1.10 திவிநெகும திட்டத்திற்காக கிராமிய தெங்கு கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவுதல்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ், அமுலிலுள்ள திவிநெகும தேசிய வேலைத்திட்டத்திற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பங்களிப்பு பெறப்பட்டுள்ளது. இப்பங்களிப்புக்கள் மூலம் ெங்கு சார்ந்த மனைக் கைத்தொழிலை ஏற்படுத்தல் மற்றும் தாம் வாழும் சூழலில் வீணாக்கப்படும் தெங்கு சார்ந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி கைத்தொழில்களை மேற்கொண்டு கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக உதவும் நோக்குடன் கீழ் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

| இல | பயிற்சி வேலைத் திட்டம் | பிரதேச செயலக கோட்டப் பிரிவு | சமூகமளித்த பயனாளிகள்ன் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தேங்காய் சிரட்டை சார்ந்த உற்பத்தி | நாச்சாதுவ | 12 |
| 2. | தும்பு உற்பத்தி | சாவகச்சேரிய<br>மட்டக்களப்பு<br>இவேகம | 24<br>9<br>7 |
| 3. | ஈர்க்கில் கட்டு, தூரிகை உற்பத்தி | ரம்புகனை<br>தெஹியோவிட<br>கேகாலை<br>சாவகச்சேரிய<br>மட்டக்களப்பு<br>மாத்தளை | **12**<br>**17**<br>**11**<br>**16**<br>**6**<br>**19** |
| **மொத்தம்** | | | **133** |

இதற்கு மேலதிகமாக மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை, மாத்தறை, காலி திருகோணமலை, நுவரெலிய மற்றும் குருணாகவல் ஆகிய பிரசேதங்களில் தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த கைத்தொழில் தொடர்பான தொழில்நுட்பக் கண்காட்சி மற்றும் அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் 10 நடத்தப்பட்டன.

## 1.11 தேசத்திற்கு மகுடம் தேசிய வேலைத்திட்டத்திற்காக தெங்கு சார்ந்த கைத்தொழில் நோக்கிற்கான பிரிவின் பங்களிப்பு

2012 பெப்ரவரி மாதம் அனுராதபுர மாவட்டத்தில் ஒயாமடுவவில் இடம்பெற்ற தேசத்திற்கு மகுட தேசிய கண்காட்சிக்காக இப்பிரிவின் பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன. இதன் போது தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை அறிமுகப்படுத்தல். அதன் பண்புசார் தரத்தினைப் பாதுகாத்தல் போன்ற முக்கியத்துவம் மற்றும் கைத்தொழிலை மேற்கொள்ளும் முறைகள் தொடரபாக மக்களை அறிவுறுத்துவதனைப் போன்று தாம் வாழும் சூழலில் இலகுவாகப் பெறக்கூடிய வீணாக்கப்படும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி கைப்பணி மற்றும் அலங்காரப் பொருட்களை தயாரித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன இதன் போது கீழ் குறிப்பிடப்பட்ட கண்காட்சியின் ஊடான அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- தும்பு உற்பத்தி
- ஈர்க்கு கட்டை மற்றும் தூரிகை உற்பத்தி
- துடைப்ப உற்பத்தி
- ஈர்க்கில் சார்ந்த உற்பத்தி
- தேங்காய் சிரட்டை சார்ந்த உற்பத்தி
- மட்டை சார்ந்த உற்பத்தி
- தேங்காய் எண்ணெய் உற்பத்தி
- தேங்காய் ஓலை சார்ந்த உற்பத்தி
- தேங்காய் ஊடாக அலங்காரப் பொருட்கள் உற்பத்தி



*தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் கண்சாட்சிக் கூடத்திற்கு வருகை தந்த பொதுமக்கள்*

இதற்கு மேலதிகமாக தும்பு சார்ந்த இயந்திரம், தேங்காய் சிரட்டை மாதிரிகள் இக்கண்காட்சியில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும், தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடைபெற்ற சகல கண்காட்சி கூடங்களிலும் Educational and Natural Exhibit Stall என்ற தொனிப்பொருளின் கீழ் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை பெற்றுக் கொண்டது.

# 2. தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு

தர நிருவாகம் செவயற்பாடுகள் தொடர்பான வேலைத்திமட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் ஏற்றுமதியின் பண்புசார் தரத்தினை உறுதிப்படுத்தல்ஈ, பல்வேறுபட்ட விண்ணப்பதாரிகள் கேள்விக்கேற்வாறு பரிசோதனை வழங்குதல் மற்றும் தெங்கு உற்பத்தியை உள்நாட்டு சந்தைக்கு வழங்கும் போது பரிசோதனைகளை மேற்கொண்டு உறதிப்படுத்தல் மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்தியினை உயர்மமட்டத்திற்குப் பேணுவதற்கான ஆலோசனைகளை வழங்குவது தர நிருவாக மற்றும் தரப்பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாகும்.

பிரிவின் பணிகள் ;

- **ஏற்றுமதிக்காக அனுப்பும் போது உலர்த்திய தேங்காய் உற்பத்திகளின் பரிசோதனை மேற்கொள்ளல் மற்றும் தரச் சான்றிதழை வழங்குதல்.**

  தெங்கு உற்பத்தித் துறையில் பிரதான உள்ளீடு சார்ந்த உற்பத்தியான உலர்த்திய தேங்காய் கைத்தொழில் பிரதானமாக சிறந்த தர கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அனுப்பப்படுவதுடன் நாளாந்தம் உலர்த்திய தேங்காய்களின் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் நாளாந்தம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. ஏற்றுமதிக்காக அனுப்பப்படும் இவ்வுற்பத்திக்காக தரச் சான்றிதழ்களை வழங்கும் வகையில் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

- **தேங்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடுவோர், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்காக மேற்கொள்ளப்படும் சேவையாக இரசாயன பரிசோதனை சேவை நிவாரண கட்டண முறையிலான பணிகள்.**

  இலங்கை தர நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள தெங்கு சார்ந்த உற்பத்திக்கான தரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நுண்ணுயிரியல் மற்றும் பௌதீக இரசாயன பரிசோதனைகளை மேற்கொள்ளும் இயலுமை தெங்கு அபிவிருதி ஔதிகாரக சபையின் தர நிருவாகம் மற்றும தரப் பாதுகாப்புப் பிரிவுக்கு இருப்பதுடன், தெங்கு கைத்தொழில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்களின் சுபீட்சத்திற்காக நிவாரண விலைக்கு துரித பரிசோதனை சேவைகளை வழங்க சகல சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

- **உலர்த்திய தேங்காய ் உற்பத்திகளை விருத்தி செய்வதற்கான நுண்ணுயிரியல், பௌதீக இரசாயனப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்**

  அதிகார சபையின் இரசாயன கூடத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளைத் தவிர, நடமாடும் இரசாயன கூட சேவைகள் மூலம் தெங்கு உற்பத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்தல் மற்றும் உற்பத்தியினை உயர்தரத்தினை பேணுவதற்கான நுண்ணுயிரியல் மற்றும் இரசாயன பரிசோதனைகளை மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக,

- தெங்கு உற்பத்தியினை மேற்கொள்ள கைத்தொழிற்சாலைகளுக்காக தொழிநட்ப உதவிகளை வழங்குதல், கைத்தொழிலசாலைகளின் பரிசோதனை மற்றும் ஆலோசனைப் பங்களிப்புக்களை வழங்குதல்.

- தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் இரசாயன கூடங்களுக்காக ISO 17025 தரச் சான்றிதழ்களை வழங்குதல்.

- நுண்ணுயிரியல் பரிசோதனையின் போது நச்சுப் பதார்த்தங்கள் தொடர்பாக தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிற்சாலைகள் விசேட பரிசோதனைக்கு (Swab tests) உட்படுத்தல் மற்றும் இரசாயன பரிசோதனைகளை மேற்கொண்டு ஆலோசனை வழஙகுதல்.

- தேங்காய் எண்ணெய் கைத்தொழில் சுகாதாரப் பாதுகாப்பினை பேணுதல், மற்றும் அதனைக் கட்டியெழுப்பும் நோக்குடன் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையங்களின் சுகாதாரப் பாதுகாப்பினை பரிசோதனை செய்வதும், தேங்காய் எண்ணெய் உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களாக கொப்பரா, உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் மற்றும் அதன் பக்க விளைவான பின்னாக்கு இலங்கையின் தரத்திற்கு அமைவானதாக என்பதனை பரிசோதனை செய்தல்.

- உள்நாட்டு சந்தையில் காணப்படும் தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் தரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், இனங்காணப்பட்ட கலப்பு தேங்காய் எண்ணெய் விற்பனையாளர்கள் தொடர்பான விளக்கம், நுகர்வோர் விவகாரம் அதிகார சபை உணவுப் பொருளுக்கான நிருவாக அதிகாரம் நிறுவனமான சுகாதார அமைச்சின் உணவு நிருவாகப் பிரிவுக்கு வழங்கி, அந்நிறுவனத்துடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொண்டு கலப்பு தேங்காய் எண்ணெய்யைப் பயன்படுத்தி நுகர்வோரை பாதுகாப்பதற்கான சேவைகளை வழங்குதல்.

- தெங்கு சார்ந்த உற்பத்தி தொடர்பில் எழக்கூடிய உள்நாடு மற்றும் வெளிநாட்டு முறைப்பாடுகளும் உற்பத்திப் பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

- தெங்கு சார்ந்த உற்பத்தியின் முக்கியத்துவம் தொடர்பான அறிவுறுத்தும் வேலைத்திட்டம், கண்காட்சிக்காகப் பங்கேற்றல்.

- உணவுக்கான ஏனைய உற்பத்திகளை பரிசோதனை செய்யும் சேவைகளை மேற்கொள்ளல்.

- நீர், பகுப்பாய்வு பணிகளை மேற்கொள்ளல்.

- தற்போது காணப்படும்இலங்கை தரத்தினை சமகாலப்படுத்தல், மற்றும் தற்போது தரமின்றியுள்ள தெங்கு சார்ந்த உற்பத்திக்காக தரத்தினை வகுப்பதற்கு இலங்கை தர நிறுவகத்துடன் தொடர்புபட்ட வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.

- தெங்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலில் காணப்படும் இரசாயன கூடங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாளர் சபைக்காக பயிற்சி வேலைத்திட்டங்களை நடத்துதல்.

இதற்கமைய, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சினால் அறிமுடுகப்படுத்தப்பட்டுள்ள கப்ருக்க எழுச்சி, தேசிய தெங்கு அபிவிருத்தித் திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு உரியதான முன்னேற்றங்களை எட்டப்பட்டுள்ளன.

இதன் தரத்திற்கமைய உரிய பண்புசார் தரமிக்க உற்பத்திகளை உருவாக்குவதும், அதற்கமைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச ் சந்தையை விருத்தி செய்யவும் எதிர்பார்க்கப்படுவதுடன், தெங்கு உற்பத்தியினை பரிசோதனை செய்யும் பணிகள் தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சேவைகளை சிறந்த தரத்திற்கமைய வழங்குவதறங்காக இரசாயன கூடங்களுக்காக ISO 17025 தரச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 2.1 ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுப் பயன்பாட்டுக்காக அனுப்பப்டும் தெங்கு உற்பத்தியின் தரத்தினை உறுதிப்படுத்தல்.

### 2.1.1 தெங்கு உற்பத்தியின் போது ஏற்றுமதிக்கு முன்னர் நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் உறுதிப்படுத்தல்.

தெங்கு உள்ளிடு சார்ந்த உற்பத்தியின் பரிசோதனைப் பணிகள் பிரதானமாக இடம்பெறுவது உலர்த்திய தேங்காய் ஆகும். உலர்த்திய தேங்காய் உற்பத்தி நிலையங்களில் மேற்கொள்ளப்படும் நாளாந்த உற்பத்தி, சல்மொனல்லா பரிசோதனைக்கு உட்படுத்தல், தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் நுண்ணுயிரியல் பரிசோதனைக் கூடத்தில் இது தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைய, ஏற்றுமதிக்காக அனுப்பப்படும் உலர்த்திய தேங்காயின் சகல தரங்களும் தர நிருவாக மற்றும் தர பாதுகாப்புப் பிரிவின் இரசாயன கூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. தேங்காயின் பயன்பாடுகள், தேங்காயின் அளவு மட்டும், தேங்காயின் விலை உட்பட வெளிநாட்டுச் சந்தையில் உலர்த்திய தேங்காயின் மீதான உள்நாட்டு உலர்த்திய தேங்காய் உற்பத்தி நிலையத்தில் காணப்படுவதுடன், அவ்வுற்பத்தியின் அளவுக்கமைய மாதிரிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டின் சல்மொனல்லாப் பரிசோதனைக்காக அனுப்பப்படும் உலர்த்திய தேங்காய் மாதிரியின் அளவு 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடு செய்யும் போது குறைந்த மட்டடத்தினைக் காணப்பிக்கின்றது. இதற்குப் பிரதான காரணம் 2011ஆம் ஆண்டின் உலர்த்திய தேங்காய் உற்பத்தி குறைவடைந்தமையாகும்.

| ஆண்டு | உலர்த்திய தேங்காய் உற்பத்தி | இரசாயன கூடங்களில் கிடைக்கப்பெற்ற மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2011 | 46,620.477 | 10,223 |
| 2012 | 41,647.384 | 9,381 |

2012 ஆம் ஆண்டுக்கான 9500 மாதிரி இலக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 2012ஆம் ஆண்டில் இப்பரிசோதனைக்காக பெற்றுள்ள முன்னேற்றங்கள் 98% ஆகும்.




2011ஆம் ஆண்டின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உலர்த்திய தேங்காய் உற்பத்தியின் 21 மாதிரிகளின் சல்மொனல்லா விஷம் கலந்திருந்ததாக அறிவிக்கப்படுகிறது. இதனை விகிதாசாரமாக கணிப்பீடு செய்யும் போது மொத்தமாக நச்சு கலக்கப்பட்டிருந்த அளவு 0.20% ஆகும். 2012 ஆண்டில் நச்சுக் கலந்திருந்த மாதிரிகளின் எண்ணிக்கை 8 ஆகும் 2011ஆம் ஆண்டு மாதிரிகளின் விகிதாசாரமாகக் கணிப்பீடு செய்யும் போது அது 0.08% ஆக காணப்பட்டதுடன், நச்சுத் தாக்கத்திற்கு உட்படும் அளவிலும் குறைவு காண்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தியின் தரத்தின் சுகாதார பாதுகாப்பின் விருத்திகள் காணப்படுகின்றன.




| ஆண்டு | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| நச்சு தன்மைக்கு உட்பட்ட விகிதாசாரம் | 0.50% | 0.10% | 0.12% | 0.12% | 0.2% | 0.08% |

ஏற்றுமதிக்கு முன்னரான பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்காக உள்ளீடற்ற உற்பத்திகள் மூலம் முன்னுரிமை வழங்கப்படுவது தும்பு துகல் சார்ந்த உற்பத்திகளுக்காகும். 2011ஆம் ஆண்டில் 640 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 2012ஆம் ஆண்டில் 645 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 2012ஆம் ஆண்டின் தும்பு துகல் சார்ந்த உற்பத்தி வருடாந்த இலக்கிற்கு இணைவாக கூடுதலான அளவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதன் முன்னேற்றம் 108% ஆக காண்பிக்கப்பட்டுள்ளது.




## 2.1.2 தெங்கு உற்பத்தியின் ஏற்றுமதிக்கு முன்னரான பௌதீக இரசாயன பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளல்.

நாளாந்த உலர்த்திய தேங்காய் மாதிரிகள், விசேட ஏற்றமதிப் பரிசோதனை மாஸ் அமெரிக்க ஏற்றுமதி, உலர்த்தி தேங்காய் மீள மாதிரியாக வகைப்படுத்தல், மீள தயாரித்த உலர்த்திய மாதிரி, விசேட நாளாந்த மாதிரி, பழைய மொத்த மாதிரி, கொழுப்பு நீக்கப்பட்ட உலர்த்தி தேங்காய் மாதிரிகள் ஆண்டுக்குள் பகுப்பாய்வுக்கு உடப்டுத்தப்படுகின்றன.

**பௌதீக மற்றும் அது சார்ந்த பரிசோதனைகளை மேற்கொள்ளல்.**

உலர்த்திய தேங்காயின் நிறம் அதன் பருமனின் அளவு ஈரலிப்பு, சுவை, மணம், கழிவுப்பொருள், எண்ணெய் உட்பட பல்வேறுபட்ட விடயங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இதற்கமைய, 2011 ஆம் ஆண்டில் 10,307 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 2012ஆம் ஆண்டு 9,381 மாதரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 2012ஆம் அண்டின் இலக்கிற்கு இணைவாக 99% சதவீத முன்னேற்றம் காணப்பிக்கப்பட்டள்ளது.




| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| மாதிரி அளவு | 9913 | 8381 | 8333 | 6586 | 10307 | 9381 |
| இலக்கு | 10250 | 8750 | 8500 | 8500 | 6800 | 9500 |

2011 பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட உலர்த்திய தேங்காய் மாதிரி 10,307 இல் 223 மாதரிகள் அதாவது 2.2% பௌதீக வடிவமைப்பில் குறைபாடுகள் காண்பிப்பதுடன், 2012ஆம் ஆண்டில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதரிகளின் 9,381 இல் 180 மாதிரிகள் அதாவது 1.9% குறைபாட்டினைக் காண்பித்துள்ளது. பௌதீக அடையாளங்களில் குறைபாடுகளில் சிறிதளவு 2012ஆம் ஆண்டு குறைவடைந்துள்து. அத்துடன் பௌதீக அடையாளங்களில் குறைபாடுகள் கொண்டுள்ள மாதரிகள் குறைவாக காண்பிக்கப்பட்டுள்ளமையும் சிறந்த முன்னேற்றமாகும்.

தொடர்ச்சியான தர குறைபாடுகள் அதாவது உயர்ந்தபட்ச அங்கீகரிக்கபபட்ட எல்லைகளில் காணப்படும் உலர்த்திய மாதிரிகளின் எண்ணிக்கை 2012ஆம் ஆண்டில் 7.1% விகிதமாகும். இது 2011ஆம் ஆண்டின் 9.9% என்பதுடன், அதற்கு இணைவாக குறைந்த தொடர்ச்சியான தரக் குறைபாடுளின் அளவு 2012ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளது. தொடர்ச்சியான குறைபாடுகள் கொண்ட உற்பத்திகள் இடம்பெறும் பட்சத்தில் குறைபாடுகளுள்ள உற்பத்திகள் தரத்திற்கு அமைய இருக்காமையினால் அவ்வாறான மாதிரிகள் தொடர்பில் துரிதகதியில் அறிக்கைகளை வெளியிட்டு உற்பத்திச் செயற்பாடுகளை வகுப்பதற்காக செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவினூடாக உற்பத்தியாளர்களுக்கு குறைபாடுகளை அறிவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

ஏற்றுமதி செய்யப்படும் உலர்த்திய தேங்காய்களின் ஊடாக அமெரிக்க ஏற்றுமதிகளுக்காக அனுப்பப்படும் இரண்டு உலர்த்தி மாதிரிகள் 2011ஆம் ஆண்டுக்காகக் கிடைக்கப்பெற்றுள்ளது. 2012ஆம் ஆண்டுக்காக இப்பரிசோதனைகளுக்கு 185 மாதிரிகள் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும், அமெரிக்க ஏற்றுமதிக்காக தரத்திற்கு அமைய இணங்கி 107 மாதிரிகள் மாத்திரமே பெற முடிந்துள்ளது. மாஸ் உற்பத்திக்காக மூலப்பொருளுக்காக பயன்படுத்தும் வகையில் ஏற்றுமதி செய்யப்படும் உலர்த்தி தேங்காய் 55 மாதிரிகள் 2011ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றதுடன், 2012ஆம் ஆண்டுக்கான இவ்வாறான 77 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. 2011ஆம ஆண்டுக்கு இணைவாக 2012ஆம் ஆண்டு அமெரிக்க ஏற்றுமதியைப் போன்று

மாஸ் உற்பத்திக்காக அனுப்பப்பட்ட உலர்த்திய ஏற்றுமதிகள் அதிகரித்துள்ளதைக் காணமுடிகிறது.

## 2.2 தெங்கு சார்ந்த உற்பத்திகளை பரிசோதனைகளை மேற்கொள்ளும் சேவைகளை முன்னெடுத்தல்.

உள்நாட்டு உற்பத்தியாளர்களின் பல்வேறுபட்ட தெங்கு உற்பத்திகளை பகுப்பாய்வு, சேவைகளாக முன்னெடுகக்கும் செயற்பாடுகள் தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. நுண்ணுயிரியல் பரிசோதனை, இரசாயனப் பரிசோதனை, பௌதீக பரிசோதனை மற்றும் உணர்வு ரீதியிலான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சேவைகள் நியாயமான விலையில் மேற்கொள்ளப்படுவதுடன், விண்ணப்பதாரிகளின் தேவைக்கேற்றவாறு உரிய பரிசோதனை அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. தெங்கு சார்ந்த உற்பத்தியாளர், நுகர்வோர், சிறிய, நடுத்த மற்றும் பாரிய வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர் போன்ற எந்தவொரு தரப்பினருக்காகவும் தெங்கு சார்ந்த உற்பத்திகளைப் பரிசோதனை செய்யும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

ஏற்றுமதியாளர்களின் விசேட வேண்டுகோளுக்கு இணங்க உலர்த்தி தேங்காய்களுக்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் ஓரளவு கொழுப்பு நீக்கப்பட்ட உலர்த்தி தேங்காய், கொப்பரா, தேங்காய் நார், தேங்காய் எண்ணெய், பின்னாக்கு, தும்புத் துகள் மற்றும் அது சாரந்த உற்பத்திகள் மற்றும தேங்காய் பால் மற்றும ˙பால் சார்ந்த ஏனைய உற்பத்திகள் போன்ற பல்வேறுபட்ட தெங்கு உற்பத்திப் பொருட்கள் இலங்கை தரத்திற்குரியதாக பரிசோதனைகளை மேற்கொள்ளும் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தேவையான நவீன இரசாயன உபகரணங்கள் தர நிருவாகப் பகுதியில் காணப்படுவதுடன், துரித பெறுபேறுகளை வழங்க தர நிருவாகப் பகுதியினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

தரத்திற்கு அமைவாக தெங்கு சார்ந்த உற்பத்திகளை பரிசோதனை செய்து அதன் நிலமைகள் தொடர்பாக விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு இலங்கை என்ற தரத்தினை பாதுகாக்கக் கூடியவாறு தரத்தில் உயரிய தெங்கு உற்பத்திகளை தொடர்ந்தும் வெளிநாட்டு சந்தைக்கு அனுப்புவதற்காகவும், ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் மேற்கூறப்பட்ட பதிவு செய்த நிறுவனங்களுக்காக கழிவுக் கட்டணங்கள் இப்பரிசோதனைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்திகள் பிரதானமாக அனுப்பப்படுவதுடன் 2011ஆம் ஆண்டில் 293 மாதிரிகள் பரிசோதனை உட்படுத்தப்படுகின்றன. 2012ஆம் ஆண்டில் விண்ணப்பதாரியின் தேவைக்கமைய தேங்காய் உள்ளீடு சார்ந்த உற்பத்திகள் 766 மாதிரிகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன், இலக்காகக் கொண்டுள்ள மாதிரிகள் 7000க்கு இணைவாக முன்னேற்றம் 108% ஆகும். 2012ஆம் ஆண்டில் தெங்கு உள்ளீடு சார்ந்த உற்பத்திகளின் மாதிரிகள் 766 சல்படை ஒக்சோட், எப்லரொக்சினுக்காக மாத்திரம் 452 உலர்த்திய மாதிரிகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மொத்த மாதிரிகளின் எண்ணிக்கை 59.7% ஆகும்.




| ஆண்டு | விசேட உலர்த்திய தேங்காய் (மாதிரி) | பின்னாக்கு (மாதிரி) | தேங்காய் எண்ணெய் (மாதிரி) | கொப்பரா (மாதரி) | உள்ளீடு நீக்கப்பட்ட உலர்த்தி தேங்காய் (மாதரி) | தேங்காய் | தேங்காய் பால் தேங்காய் கிறீம்/ மா | மொத்த மாதரிகளின் எண்ணிக்கை (மாதிரி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 82 | 33 | 86 | 15 | 95 | 01 | 02 | 314 |
| 2011 | 80 | 07 | 78 | 04 | 124 | -- | -- | 293 |

பிரிவின் வசதிகள் விரிவுபடுத்தப்படுவதனால் தெங்கு சார்ந்த உற்பத்திகளுக்குப் புறம்பாக ஏனைய உற்பத்திகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், கழிவு வழங்கப்படாத போதிலும், நிவாரண விலையின் கீழ், துரிதகதியில் சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, இவ்வாறான 16 மாதிரிகள் 2012ஆம் ஆண்டில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், நீர், இளநீர் எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பாம் எண்ணெய், அரிசி, மறறும குளிரூட்டப்பட்ட தேங்காய் போன்ற மாதிரிப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. இதற்கு மேலதிகமாக உலர்த்திய தேங்காய் உற்பத்தியாளர்களிடம் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் சூழலுக்கு உகந்தா என்பதனை பரிசோதனை செய்து அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

## 2.3 ISO தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல்.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் வழங்கப்படும் பரிசோதனைகளுக்காக சர்வதேச வரவேற்பு கிடைக்கக் கூடிவாறு மட்டும் பரிசோதனைகளை சரியாக, விரிவான மறறும் கிரமமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக, தேங்காய் எண்ணெய் பரிசோதனை



முறைக்காக தர நிருவாக மற்றும தரப் பாதுகாப்புப் பிரிவின் இரசாயன பகுப்பாய்வுப் பிரிவினால் இலங்கையின் தர நிர்ணய சபையின் மூலம் வழங்கப்படும் ISO 17025 தரச் சன்றிதழ் 2012/06/12 வழங்கப்பட்டது.

தேங்காய் எண்ணெய்க்காக முதலாவது பரிசோதனை (1st Surveillance) நடாத்ததப்பட்டு அவ்றவறிக்கையும் நுண்ணுயிரில் பகுப்பாய்வுப் பிரிவுக்காக அடிப்படை கணக்காய்வுச் செயற்பாடுகளைப் பேணி நுண்ணுயிரியல் இரசாயன கூடத்தில் சல்மோனல்லா முழுமையாக மதிப்பீடு செய்து நீர் மற்றும் அது சார்ந்த பதார்த்தங்கள், கொலிபோம் எண்ணிக்கை, கோலை எண்ணிக்கைக்காக ISO தரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக அதன் அறிக்கையுடன் விண்ணப்பப்படிவம் இலங்கை தர நிர்ணய சபைக்கு அனுப்பபட்டுள்ளது. பௌதீக முன்னேற்றம் 2012ஆம் ஆண்டுக்காக 100% உள்ளடக்கப்பட்டுள்ளது.


SLAB

Certificate of Accreditation

Sri Lanka Accreditation Board for Conformity Assessment hereby declares that

Chemical Laboratory of Quality Control and Quality Assurance Division Coconut Development Authority

having being found to comply with the accreditation criteria for testing/calibration laboratories as described in ISO / IEC 17025 :2005 has been accredited as a testing laboratory under the field of

Chemical Testing

and has been assigned the accreditation number

TL 030-01

This certificate is issued on 12 June 2012 and is valid until

11 June 2015

The accreditation was granted for the first time on 12 June 2012

The scope and conditions of accreditation are specified in the Schedule of Accreditation bearing the accreditation number appearing in this certificate.

Director / CEO
Sri Lanka Accreditation Board for Conformity Assessment
Colombo, Sri Lanka

### 2.3.1 பயிற்சி வேலைத் திட்டங்களை நடத்துதல்.

தர நிருவாகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு இருப்பது ISO தரச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளுக்காக மற்றும் புதிய செயற்றிட்டத்தின் கீழ் சமகால அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தெங்கு உற்பத்திகளை பரிசோதனை செய்வதற்காக தேவையான பயிற்சி வேலைத்திடடங்கள், இரசாயன கூடத்தின் ஊழியர்களுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வெளி இரசாயன கூடங்களின் ஊழியர்களுக்காக தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவினால் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் இரசாயன கூடத்தின் ஊழியர் சபைக்காகப் பயிற்சிகளை வழங்குதல்.**

| | பயிற்சி வேலைத் திட்டங்கள் | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Seminar on new food Hygiene Regulations | 01 |
| 2. | Training programme on statistical process control (SPC) sampling techniques and inspection for ISO 9001 quality Management system | 01 |

| | பயிற்சி வேலைத் திட்டங்கள் | பங்குபற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 3. | Seminar on Agilent spectroscopy | 01 |
| 4. | ஊழியரின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல். | 06 |
| 5. | Detection and enumeration of international enterococci in water and food | 03 |
| 6. | Seminar on Accreditation supporting safe food and clean drinking water | 02 |

## 2.4 ஏற்றுமதி செய்வதற்காக உற்பத்தி செய்யப்படும் தெங்கு உற்பத்திக் கைத்தொழிலின் தரத்தினைப் பாதுகாத்தல்.

உலர்த்திய தெங்கு உற்பத்திச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக நுண்ணுயிரில் பௌதீக இரசாயன பரிசோதனைகளை நடாத்துதல், கைத்தொழிற்சாலைகளில் பரிசோதனைகளை நடாத்துதல் மற்றும் ஆலோசனை பங்களிப்புக்களை வழங்குதல் இதன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளாகும்.

உலர்த்திய தேங்காய் உற்பத்தியின் தரப் பாதுகாப்புப் பணிகளை உரியவாறு முன்னெடுப்பதற்காக ஒரு மாதத்திற்குள் சகல உலர்த்திய தேங்காய் ஆலைகளையும் தழுவக்கூடியவாறு தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு அமைய நடமாடும் இரசாயன கூடங்களைப் பயன்படுத்தி மேற்கூறப்பட்ட சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்பொழுதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேரம் போன்ற கொடுப்பனவு எல்லைக்குள் தேக்கி இரசாயன கூடத்தின் நாளாந்த பரிசோதனை செயற்பாடுகளுக்கு தடைகள் ஏற்படாதவாறு இப்பணிகளை சிறந்த திட்டமொன்றை மேற்கொள்ளப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டுக்காக வெளிகளச் சேவைகள் 494 மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2012ஆம் ஆண்டுக்குள் 419 வெளிக்களப் பரிசோதனைகளை நடாத்த முடிந்துள்ளது. 2010ஆம் ஆண்டு இலக்கிற்கு அமைவாக முன்னேற்றம் 105% சதவீதமாகும்.

உலர்த்திய தேங்காய் உற்பத்தி தரத்தினை விருத்தி செய்வதற்காக நுண்ணுயிரியல் பரிசோதனை 2011ஆம் ஆண்டுக்காக 413 மேற்கொள்ளப்பட்டதுடன், 2012ஆம ஆண்டுக்காக 311 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 2011ஆம் ஆண்டிலும், 2012ஆம் ஆண்டுக்கு இணைவாக அவ்வுயரிய மட்டத்தில் உலர்த்திய தேங்காய் உற்பத்திகள் காணப்படுகின்றமையால், அதற்கமைய பரிசோதனைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், 2012ஆம் ஆண்டின் இலக்கிற்கு இணைவாக முன்னேற்றம் 99% ஆகும்.

மேலும் உலர்த்திய தேங்காய் உற்பத்தியினை பயன்படுத்தல், நீரில் உரிய தரம் காணப்படுகின்றதா என்பதனை பரிசோதனை செய்வதற்காக அந்நீரின் நுண்ணுயிரியல், இரசாயன மற்றும பார உலோகப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நுண்ணுயிரியல் மற்றும் 206 இரசாயனப் மாதிரி இரசாயனப் பகுப்பாய்வுகள் இலக்கிற்கு இணைவாக 103% ஆகும்) பார உலோகப் பகுப்பாய்வுகளுக்காக 86 நீர மாதரிகள்

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இம்மாதிரிகளின் 7 பார உலோக வகைகள் வீதம் 616 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.5 தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை கட்டியெழுப்புதல்.

### 2.5.1 கலப்பு தேங்காய் எண்ணெய் தொடர்பாக சந்தை மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.

சர்வதேச தரங்களுக்கு அமைய தெங்கு சார்ந்த உற்பத்தியின் பண்புசார் தரத்தினை விருத்தி செய்யும் பணிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. உணவு என்ற அடிப்படையில் தேங்காய் எண்ணெயிலுள்ள சுகாதார நலன்களுக்குப் பொருத்தமானது மற்றும் அவ்வுற்பத்திகளின் தரத்திற்கமைய உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களை போன்று தரத்தைவிட குறைந்தவின்றி சந்தைக்கு வழங்கும் நோக்காகக் கொண்டு தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்பு பரிவினால் பரிசோதனைகள் உட்பட ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேங்காய் எண்ணெய் தொடர்பாகப் பெற்றுள்ள பகுப்பாய்வு பெறுபேறுகள் சுகாதார அமைச்சு மற்றும நுகர்வோர் அதிகார சபைக்கு வழங்கு சட்ட ரீதியான செயறங்பாடுகள் மூலம் சுத்தமான தேங்காய் எண்ணெய் என்ற போர்வையில் கலப்பு தேங்காய் எண்ணெய்யை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களைக் கட்டுப்படுத்தவும் பங்களிப்புக்கள் செய்யப்பட்டன.

நாட்டின் மாவட்ட அடிப்படையில் சந்தைகளில் காணப்படும் தேங்காய் எண்ணெய் மாதிரிகளை சேகரித்து அவற்றை கலப்பு தேங்காய் எண்ணெயா என்பது குறித்து பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்கான பகுப்பாய்வுகளை தொடர்ச்சியாக நடத்தும் பணிகள் 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், சிறிய மற்றும் நடுத்தர பாரிய சந்தைகளை தழுவக்கூடியவாறு விரிவான அடிப்படையில் மேற்பார்வைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், நுகர்வோர் அதிகார சபையுடன் இணைந்து சந்தையில் தேங்காய் எண்ணெய்கள் மாதிரிகளைச் சேகரித்து அம்மாதிரகளை பரிசோதனை செய்து பெறுபேறுகளை வழங்குவதற்கு மேற்குறிப்பிட்ட பணிகள் மூலம் பங்களிப்புக்கள் செய்யப்பட்டன. 2012ஆம் ஆண்டு 96 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு, கலப்பு தேங்காய் எண்ணெய் 28% ஆக காணப்பட்டதுடன், 2011ஆம் ஆண்டில் ம்ேற்கொள்ளப்பட்ட இவ்வாறான பரிசோதனைகளில் 39% ஐ விட மேற்பட்ட விகிதாசாரம் கலப்பு தேங்காய் எண்ணெய் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 2012ஆம் ஆண்டில் கலப்பு தேங்காய் எண்ணெய்யில் பின்னடைவுகள் ஏற்பட்டன. தேங்காய் எண்ணெய்யின் நிலைப்பாட்டுக்காகவும் நுகர்வோர் தொடர்பிலும் இது சிறந்த முன்னேற்றங்களைக் காண்பித்துள்ளது.

### 2.5.2 தேங்காய் எண்ணெய் கைத்தொழிலின் தரத்தினை விருத்தி செய்தல்.

தேங்காய் எண்ணெய் உற்பத்தியினை சிறந்த தரத்திற்கு மாற்றியமைப்பதற்காக தேங்காய் எண்ணெய்கள் ஆலைகள் சார்ந்த நிருவாக வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய, தேங்காய் எண்ணெய் உற்பத்தியின்

மூலப் பொருட்களான கொப்பரா உரிய தரத்தில் காணப்படுகின்றதா என்பது குறித்தும், உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் சிறந்த தரத்தில் காணப்படுகின்றதா என்பது குறித்தும் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செயற்பாடுகள் வினைத்திறனுடன் இடம்பெறுகின்றதா என்பதனை ஆராய்வதற்காக தொடராக கொப்பரா, தேங்காய் எண்ணெய் மற்றும் பின்னாக்கு மாதரிகள் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையம் சார்ந்ததாக சேகரித்து, பரிசோதனைப் பெறுபேறுகள் வழங்கப்படுகின்றன. இதற்கமைய, 2012ஆம் ஆண்டுக்காக 100 தேங்காய் எண்ணெய் மாதரிகள், 60 கொப்பரா மாதரிகளும், 100 பின்னாக்கு மாதிரிகளும் பரிசோதனைகசு உட்படுத்தப்பட்டதுடன், 2012ஆம் ஆண்டின் இலக்கிற்கு இணைவாக இதன் சகல பரிசோதனைகளின் முன்னேற்றங்களும் 100% பெறப்பட்டுள்ளன. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம், குருணாகல், கம்பஹா கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட மாதிரிப் பெறுபேறுகளின் ரம் மறறும் இணங்காமை தொடர்பில் செயற்பாட்டுப் பிரிவின் ஊடாக உற்பத்தியாளர்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## ஏனைய வெளி செயற்பாடுகள்.

தேங்காய் உற்பத்தி துறையின் பிரதான மற்றும் ஏனைய பரிசோதனை தேவைகளுக்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்பு பிரிவின் பங்களிப்புத் தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்காக அனுராதபுரத்தில் இடம்பெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியில் 2012ஆம் ஆண்டில் பங்கேற்றது,







2013 ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தில் இடம்பெறவுள்ள தேசிய மகுடம் தேசிய கண்காட்சிக்கு இணைவாக கீழ் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களை தழுவக் கூடியவாறு பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் வரத்தக நிலையங்களில் கலப்பு தேங்காய் எண்ணெய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| **மாவட்டம்** | **பிரதேச செயலக பிரிவு** | **சேகரிக்கப்பட்ட மொத்த மாதிரிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| திருகோணமலை | கந்தளாய், தம்பலாகாமம், திருகோணமலை, கிண்ணியா, மூதூர், சேருவில, ஈசலம்பத்து, குச்சவெலி, மொரவெவ, பதவி ஸ்ரீபுர, கோமரன்கடவல | 22 |
| பொலன்னறுவ | ஹிகுரன்கொட, எலஹெர, தமன்கடுவ, மெதிரிகிரிய, லங்காபுர, திவுலாகம, மணலாறு | 19 |
| மட்டக்களப்பு | ஏறாவூர்பற்று, ஏறாவூர் நகரம், காத்தான்குடி, ஓட்டமாவடி, வாழைச்சேனை, கோரளஸ்பற்று வடக்கு, மண்முனை வடக்கு, ஆரையம்பதி, மண்முனை தெற்கு, எருவாவில்பற்று, மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு, போரதீவு | 36 |

**நிதி செலவினம்**

தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்பு பிரிவின் நிதி செலவினமாக மூலதன அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிதியினை செலவிட்டு, இரசாயனகூட பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக தேவையான இரசாயனகூட உபகரணங்களை கொள்வனவு செய்தல், நவீனமயப்படுத்தல், பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல், ISO தரச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் பணிகள் போன்றவற்றுக்காக செலவிடப்பட்டது. 2012ஆம் ஆண்டுக்காக ருபா 8.5 மில்லியன் நிதி அங்கீகரிக்கப்பட்டதுடன், மேற்கூறப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒதுக்கீட்டுச் செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீண்டெழும் செலவினத்தின் கீழ் பிரதான இரசாயனகூட பரிசோதனைகளை நடத்துவதற்காக தேவையான கண்ணாடிப் பொருட்கள், நுண்ணுயிரியல் பதார்த்தங்கள், இரசாயனப் பொருட்கள் போன்றவை கொள்வனவு செய்யப்பட்டதுடன், ஊழியர்களின் சம்பளம், மற்றும் ஏனைய செலவினங்களுக்காக பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் செலவிடப்பட்டுள்ளன.

# 3. விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இதன் பிரதான பிரிவான விற்பனை மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் 2012ஆம் ஆண்டு பல்வேறுபட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது தெங்கு கைத்தொழில் உற்பத்தி, விற்பனை மற்றும் ஏனைய சேவைகளில் ஈடுபட்டுள்ள பங்காளர்கள் மற்றும் நுகர்வோரின் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அவர்களின் யோசனைகள் மற்றும் தேவைகளுக்கு அமைய இத்துறையின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால செயற்பாடுகளுக்கான நிலையான தன்மையினைப் பேணுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், இதன்மூலம், இலங்கையின் பொருளாதாரத்திற்கு (உள்நாடு, மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம்) பங்களிப்புக்கள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

விற்பனை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- தெங்கு சார்ந்த உற்பத்தியை உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் விருத்தி செய்தல்.

- சூழலுக்குப் பொருத்தமான உற்பத்திகளைப் பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்.

- தெங்கு பயன்பாட்டின் போது வீணாகுவதனை குறைப்பதற்காக வாடிக்கையாளர்களை அறிவுறுத்தல். இதன்மூலம் தெங்கு உற்பத்தியினைப் பயன்படுத்துவது குறித்து பொதுமக்களை அறிவுறுத்துவதன் மூலம் தெங்குக் கைத்தொழிலின் உற்பத்தியினை மேம்படுத்துவதன் ஊடாக வருமானத்தை அதிகரிக்க முடியும்.

- தெங்கு சார்ந்த கைத்தொழில்களின் உற்பத்திகளுக்காக சந்தையினை இனங்காணும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- ஏற்றுமதியாளர்கள், தென்னந் தோட்ட மற்றும் தோட்ட உரிமையாளர்கள், வர்த்தகர்கள் ஏலவிற்பனையாளர்கள், தரகர்களைப் பதிவு செய்தல், இணக்கங்களை ஏற்படுத்தல், தீர்ப்பதற்காக தலையீடுகளை மேற்கொள்ளல்.

- உரிய தரப்பினருக்கு வழங்குவதற்காக தெங்கு கைத்தொழில் துறைக்காக வர்த்தக தகவல்கள், நிறுவனம் மற்றும் ஒப்பளவு தகவல்களை சேரித்தலும், வெளியிடலும்.

- தெங்கு மற்றும் கொப்பரா ஏலவிற்பனை நடத்துதல்.

- சிறிய மற்றும் நடுத்தர அளவு தெங்கு சார்ந்த பொருள் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் விற்பனைச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காகவும் இசுரு-சல என்ற பெயரில் வர்த்தக கூடங்களைப் பேணுதல்.

- பிரதேசத்தில் விரிவடைந்துள்ள தெங்கு சார்ந்த அலங்காரப் பொருள் உற்பத்திக்கு விருப்பத்துடன் இருப்பதற்காக பயிற்சி வேலைத்திட்டங்களை நடத்துதல்.

- தெங்கு கைத்தொழில் துறையின் முன்னேற்றத்துக்குரியதான விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தலும், தீரமானித்தல், யோசனைகள் அமுல்படுத்தல் உட்பட பின்னூட்டல்களை மேற்கொள்ளல்.

தெங்கு அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுக்காக மேலே குறிப்பிடபபட்டுள்ள பணிகளை தெங்கு கைத்தொழில் துறையின் உற்பத்தித் திறனுக்காக 2012ஆம் ஆண்டு வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டமையினால் 2012ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னால் இலங்கையின் தெங்குக் கைத்தொழிலின் ஏற்றுமதி வருமானம் ரூபா 46 பில்லியன் என குறிப்பட முடியும்.

2012 ஆம் ஆண்டில் விற்பனை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களும் அதன் முன்னேற்றங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3.1 உற்பத்தியாளர்கள் மற்றும் எதிர்கால கொள்வனவாளர்களின் வலையமைப்பை ஏற்படுத்தல்.

### 3.1.1 தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த முடிவுப்பொருள் விற்பனைகள் தொடர்பிலான சகல தெங்குத் தோட்டங்களையும் பதிவுசெய்தல்.

கடந்தாண்டைப் போன்று 2012ஆம் ஆண்டிலும் தெங்கு கைத்தொழில் துறையில் ஏற்றுமதியில் ஈடுபடும் தொழில் முயற்சியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், தெங்கு மற்றும் கொப்பரா தொடர்பிலான வர்த்தகர்கள், ஏலவிற்பனையாளர்கள், மற்றும் தரகர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம், இவர்களுக்கிடையே சிறந்த இணைப்புக்களை மேற்கொள்ள முடிகிறது.

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | 2011 | 2012 |
|---|---|---|
| ஏற்றுமதியாளர்கள் | 508 | 566 |
| தரகர்கள் | 22 | 21* |
| வர்த்தகர்கள் | 11 | 23 |
| தெங்குத்தோட்ட உரிமையாளர்கள் | 108 | 122 |

* சகல ஆண்டுகளிலும் பதிவினைப் பெற்றுக்கொண்ட ஒரு தரகர் இறந்துள்ளமையினால், அவரின் பதிவு 2012ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்படவில்லை. இருப்பினும், 2011ஆம் ஆண்டுக்கு இணைவாக 2012ஆம் ஆண்டில் தரகர்களைப் பதிவு செயதல் தொடர்பிலான குறைவுகள் காண்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 3.1.2 தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்தி ஏலவிற்பனை நடத்துதல்.

### 3.1.2.1 கொழும்பு தேங்காய் ஏலவிற்பனை

1994 ஆம் ஆண்டு தொடக்கம் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரவினால் வெற்றிகரமாக நடத்தப்பட்ட தேங்காய் ஏலவிற்பனை 2012 ஆண்டில் கீழ்குறிப்பிடப்பட்டவாறு முன்னேற்றங்களைக் காண்பித்துள்ளது.

| ஆண்டு | தேங்காயின் அளவு | | சாதாரண விலை ரூபா (1000 தேங்காய்க்கு) |
|---|---|---|---|
| | சமா்ப்பிக்கப்பட்ட அளவு | விற்பனை அளவு | |
| 2011 | 60,675,031 | 36,126,573 | 29,606.94 |
| 2012 | 86,987,442 | 46,123,219 | 22,897.10 |

2012 ஆண்டு புதிய பிரவேசமாக தேங்காய் ஏலவிற்பனையினை இணைத்தளத்தின்
ஊடாக மேற்கொள்வதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.1.2.2 பிரதேச தேங்காய் ஏலவிற்பனை

கொழும்பில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட தெங்கு ஏலவிற்பனையை பிரதேச மட்டத்தில் விரிவுபடுத்தியன் பின்னர் சிறிய மற்றும் நடுத்தர தேங்காய் செய்கையாளர்களுக்கு தமது உற்பத்திக்காக நியாயமான விலையினைப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. தற்பொழுது இப்பிரதேச தேங்காய் ஏலவிற்பனைகள் மாதந்திற்கு இரண்டு தடவைகள் நடத்தப்படுவதுடன், 2012ஆம் ஆண்டில் 2011ஆம் ஆண்டுக்கு இணைவாக கூடுதலான தேங்காய் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

| ஆண்டு | தேங்காயின் அளவு | | சாதாரண விலை ரூபா (1000 தேங்காய்க்கு) |
|---|---|---|---|
| | வழங்கப்பட்ட அளவு | விற்பனை அளவு | |
| 2011 | 1,816,980 | 751,410 | 27,948.03 |
| 2012 | 1,937,821 | 1,259,515 | 22,532.13 |

### 3.1.2.3 கொப்பரா ஏலவிற்பனை

2012 ஆம் ஆண்டின் விற்பனை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் வாராந்தம் நடத்தப்பட்ட கொப்ரா ஏலவிற்பனையில் 2011 ஆண்டுக்கு இணைவாக 2012 ஆம் ஆண்டு கூடுதலான கொப்பரா அளவு ஏலவிற்பனைக்காக வழங்கப்பட்டு இருந்தன.

| ஆண்டு | சமர்ப்பிக்கப் பட்ட அளவு (கி.கி.) | விற்பனை செய்த அளவு (கி.கி.) | சாதாரண விலைகளின் எண்ணிக்கை (ரூபா / 250 கி.கி.) | |
|---|---|---|---|---|
| | | | அதிசிறந்த இலக்கம் 1 | அதிசிறந்த இல. 2 மற்றும் 3 |
| 2011 | 457,050 | 414,340 | 39,903 | 36,267 |
| 2012 | 601,664 | 563,144 | 29,557 | 28,407 |

2011 ஆம் ஆண்டுக்கு இணைவாக 2012 ஆம் ஆண்டில் தேங்காய் உற்பத்தியின் அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டதுடன். அதன் மூலம் தேங்காய் ஏலவிற்பனைக்காக கூடுதலான தேங்காய் அளவு கிடைக்கப்பெற்றது. மேலும், தேங்காய் ஏலவிற்பனையின் போது உற்பத்திகளுக்கு நியாயமான விலை கிடைக்கப்பெற்றமையினால், ஏலவிற்பனைக்காக கூடுதலான தேங்காய் அளவினை வழங்குவதில் முன்னேற்றங்களை 2012ஆம் ஆண்டில் காணமுடிந்தது.

#### 3.1.2.4 வர்த்தக பிணக்குகள் தொடர்பிலான பணிகள்

தேங்காய் உற்பத்தி, வர்த்தக, ஏற்றுமதி செயற்பாடுகளின் போது வர்த்தகப் பிணக்குகள் எற்படுவது தவிர்க்க முடியாத விடயமாகும். 2012ஆம் ஆண்டில் விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் இச்சந்தைப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான கூடுதலான செயற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இதன்மூலம், தெங்குக் கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு பாரிய பங்களிப்புக்கள் கிடைக்கப்பெற்றன.

### 3.1.3 தனியார் துறையின் உதவியுடன் விற்பனைக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல் - உள்நாட்டு வர்த்தகக் கண்காட்சி

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையே தெங்கு சார்ந்த உற்பத்திகளைப் பிரபல்யப்படுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட கண்காட்சியில் பங்கேற்றதன் பின்னர் விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் தமது செயற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

| கண்காட்சியின பெயர் | இடம் | ஏற்பாடுகள் |
|---|---|---|
| 1. தேசத்திற்கு மகுடம் | அனுராதபுரம் | நிதியமைச்சு |
| 2. புத்தாண்டு சந்தை | விசாகா வித்தியாலயம் - கொழும்பு | விசாகா வித்தியாலயம் - கொழும்பு |
| 3. தெங்கு செய்கை ஆராய்ச்சி மற்றும் கைத்தொழில் சார்ந்த கல்வி வேலைத்திட்டம் - கப்ருக்க, சிப்நெனை | மொரட்டுவ | தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு |
| 4. தெங்கு செய்கையாளர் சங்கத்தின் வருடாந்த நிகழ்ச்சி | மிஹிலக மெதுர - சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் | தெங்கு செய்யைாளர்களின் சங்கம் |
| 5. விவசாய கண்காட்சி | கன்னொருவ – கண்டி | விவசாயத் திணைக்களம் |
| 6. கைத்தொழில் மற்றும் இயந்திர உபரகணக் கண்காட்சி | சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் | இலங்கை சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர் கைத்தொழில் சபை |

| கண்காட்சியின பெயர் | இடம் | ஏற்பாடுகள் |
|---|---|---|
| 7. தேங்காய் கன்று விநியோகிக்கும் வேலைத்திட்டம் | பண்டாரகம | தெங்கு செய்யையாளர்களின் சபை |
| 8. தம் ஆசிரி கண்காட்சி | தம்மிஸ்சர மத்திய மகா வித்தியாலயம் - நாத்தான்டிய | தம்மிஸ்சர மத்திய மகா வித்தியாலயம் - நாத்தான்டிய |
| 9. சம்பிரதாய கைத்தொழில் மற்றும் வர்த்தகக் கண்காட்சி (2012) | சிரிமாவவோ பண்டாரநாயக்க கண்காட்சி மண்டபம் | தேசிய கலை சபை |

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள திவினகும கண்காட்சியை முன்னிட்டு மன்னார், அம்பாந்தோட்டை இரத்தினபுரி, கண்டி, திருகோணமலை, முல்லைதீவு மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் தெங்கு சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பங்களிப்பு கிடைத்தது.

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கப்ருக்க புரவர வேலைத்திட்டம் கீழ் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்டன. இந்த வேலைத்திட்டத்திற்கு இப்பிரிவின் ஒத்துழைப்பு கிடைத்ததுடன், அக்கண்காட்சியில் தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளுக்காக கிடைக்கப் பெற்ற வருமானங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| கண்காட்சி நடைபெற்ற இடம் | கிடைக்கப்பெற்ற வருமானம் (ரூபா) |
|---|---|
| ரம்புக்கனை | 1,640 |
| மட்டக்களப்பு | 2,055 |
| முலட்டியன – மாத்தறை | 3,300 |
| பண்டாரகம | 5,810 |
| மடுல்ல | 3,225 |
| ஜலதர – ஹோமாகம | 5,805 |
| வேவல்பனாவ | |

**வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சி**



தெங்கு சார்ந்த உள்நாட்டு முடிவுப்பொருள்களுக்காக வெளிநாட்டு சந்தையினை இனங்காணும் போது வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிக்காக ஏற்றுமதியாளர்களின் பங்கேற்பு இதன் மூலம் வெளிநாட்டு கட்டளைகள், கூடுதலாகப் பெற்றுக் கொள்வதற்கு போட்டிகரமான குழுக்கள் தொடர்பாக ஆராய்வதற்கும் நாளுக்கு நாள் சமகாலப் படுத்தும் பொருட்களின் தரங்கள் தொடர்பாக அறிவுறுத்துவதற்கும் ஏற்றுமதியாளர்களுக்கு இயலுமைகள் கிடைக்கின்றன.

2012 ஆம் ஆண்டின் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்ற "Seattle Gift Show 2012 " க்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கண்காட்சிக்காக தும்பு துகல்கள் மற்றும் பயிர்ச்செய்கைப் பொதிகள் இறப்பர் சார்ந்த தும்பு மலர் பேச்சிகள், தூரிகைகள், மற்றும் துடைபகங்கள், அலங்காரப் பொருட்கள், தேங்காய் சிரட்டையினால் தயாரிக்கப்பட்ட ஆபகரணங்கள், அலங்காரப் பொருட்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இரு ஏற்றுமதியாளர்களுக்கு இக்கண்காட்சிக்காக பங்கேற்க தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

### 3.1.4 உள்நாட்டு மற்றும் சர்வதேச தெங்கு மற்றும் தெங்குசார்ந்த பொருள் வர்த்தகத்துக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் நிருவாகச் செயற்பாடுகள்.

தேங்காய், இளநீர் மற்றும் தென்னம் ஓலை சர்ரந்த அலங்காரப் பொருள் ஏற்றுமதிக்காக உரிய ஏற்றமதியாளர்களினால் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து அங்கீகாரம் பெறப்பட்ட வேண்டும். விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் 2012 ஆம் ஆண்டில் இவ்ஏற்றுமதிகளுக்காக தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன.

அதிகார சபையின் இணையத்தளத்தின் மூலம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் நபர்களினால் அதிகார சபைக்குக் கிடைக்கும் தெங்கு சார்ந்த பொருட்கள் தொடர்பான வர்த்தகக் கட்டளைகள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டள்ள ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கும் பணிகள் 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

### 3.1.5 தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த பொருள் தொடர்பான உற்பத்திகள், வர்த்தகம் மற்றும் ஏற்றுமதிக்கான தகவல் உட்பட தொடர்புசாதன செயற்பாடுகள்.

தேங்குக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சகலருக்கும் தமது வர்த்தகத் தீர்மானங்களை எடுக்கும் போது தீர்க்கமான காரணியாக அமைவது சரியான தகவல்களைப் பெற்று அவற்றை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதாகும். இதன் போது விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் தகவல் சேவைகள் 2012ஆம் ஆண்டில் விசேட பணிகளாக கீழே குறிப்பிடப்பட்ட பிரிவுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

| 2,164,802 | மூலதனத்துக்கான திறைசேரி வழங்கல். | 17,846,834.34 | |
| 14,917,771 | மூலதனத்துக்கான செஸ் வழங்கல் | 2,460,414 | |
| 12,146,911 | ஆலைய அபிவிருத்தி நிதி | 11,423,207 | |
| - | திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்ட பிளஸ்எஸ் எரிபொருள் நிதியம் | (70,000,000) | |
| | பிளஸ்எஸ் எரிபொருள் நிதியம் | (396,926) | |
| 64,755 | நிலையான சொத்துக்கள் வெளியேற்றம். | - | |
| **29,294,239** | **நிதிச் செயற்பாடுகள் மூலம் பெற்ற தேறிய நிதி வழங்கல்.** | | **(38,666,471)** |
| **6,011,030** | **நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/ குறைப்பு** | | (397,862) |
| 5,526,864 | **காலஎல்லையின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்** | | **11,537,894** |
| **11,537,894** | **காலஎல்லையின் இறுதியில் காணப்பட்ட நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்** | | **11,140,032** |

| | நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள | |
|---|---|---|
| | **01.01.2012** | **31.12.2012** |
| நிதி வைப்பு - துன்கந்தாவ | 1,000 | 35,399 |
| வங்கியிலுள்ள நிதிக் காசு | 11,493,939 | 11,071,632 |
| முத்திரைக் கட்டு நிதி | 407 | 407 |
| முத்திரை பதிவு இயந்திரம் | 42,548 | 32,594 |
| | **11,537,894** | **1,140,032** |

## தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
## 2012.12.31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றங்கள் தொடர்பான வெளிப்பாடுகள்.

| | வழங்கல் மற்றும் பங்கு நிதி ரூபா | அரச மூலதன வழங்கல் ரூபா | மூலதன அபிவிருத்தி நிதியத்தின் மூலம் பெற்ற வழங்களைல் ரூபா | மூலதன குழாம் ரூபா | வெளிநாட்டு உதவி ரூபா | மீள்மதிப்பீட்டு மிகை ரூபா | திரண்ட நிதியம் ரூபா | திரண்ட மிகை பற்றாக்குறை ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2012.01.01ஆம் திகதியன்று நிலுவை | 77,870,555 | 64,825,802 | 75,192,353 | 6,970,409 | 4,102,257 | 289,834,203 | 441,300,177 | (141,462,332) | 818,633,424 |
| திறைசேரியில் இருந்து நிதியம் | - | 17,846,834 | 2,460,414 | - | - | 147,883,908 | | | 168,191,156 |
| செயற்திட்ட பங்காளர் நிதி | - | - | - | - | - | - | - | - | - |
| வருமானம் மற்றும் செலவீனம் | (1,683,424) | (235,918) | - | - | - | - | (45,233,059) | (21,502,473) | (68,654,874) |
| **மொத்தம்** | **76,187,131** | **82,436,718** | **77,652,767** | **6,970,409** | **4,102,257** | **437,718,111** | **396,067,118** | **(162,964,805)** | **918,169,706** |

## *கணக்கீட்டுக் கொள்கைகள்*

### (1) கணக்கீட்டு யோசனைகள்

பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு மூலதர்மம் மற்றும் இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய வரலாற்றுச் செலவினத்தினை அடிப்படையாகக் கொண்டு இந்நிதி வெளிப்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிதி வெளிப்பாடுகளின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் பணவீக்கத்திற்காக எதுவித ஒப்பீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

### (2) பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

i. நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் போது இதுவரையில் பின்பற்றப்பட்ட பொதுவான அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு மூலதர்மம் மற்றும் கொள்ளைகள், ஒப்பளவுகள், தரங்களுக்கமைய கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
ii. தனித்தனியான குறிப்புக்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு சில மாற்றங்களைத் தவிர கணக்கீட்டுக் கொள்கை மற்றும் கணிப்பீட்டு முறை கடந்த நிதி ஆண்டுக்குள் பின்பற்றப்பட்டவைகளுக்கு அமைவானதாகும். ஐந்தொகைத் தினத்துக்குப் பின்னரான வெளிப்படுத்துகைத் தேவைகள் எதுவும் இடம்பெறவில்லை.

### (3) சொத்து மதிப்பீடுகள்

சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டிருப்பது திரட்டிய் தேய்மானத்திலிருந்து குறைக்கப்பட்ட செலவினத்தின் அடிப்படையிலாகும். கீழ்க்குறிப்பிடப்பட்ட வருடாந்த விகிதாசாரத்துக்கு இலகுவான அமைய நிரல் முறைக்கமைய தேய்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| கட்டிடம் மற்றும் நிர்மாணிப்பு | 2½% |
| வாகனம் | 20% |
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 10% |
| புத்தகம் மற்றும் சஞ்சிகைகள் | 10% |
| கணினி | 20% |

கொள்வனவு செய்யும் ஆண்டில் முழுமையான வருடாந்தத் தேய்மானம் மாற்றமடையும்.

#### 3.1. முதலீடு

பணிப்பாளர் சபையின் தீர்மானத்துக்கு அமைய தெங்கு செஸ் நிதியத்தில் மற்றும் தேங்காய் எண்ணெய் நிதியத்திற்கான விலையினை நிலையாகப் பேணும் யோசனைத் திட்டத்தில் சகல முதலீடுகளும் இலங்கை வங்கியின் பொருளாதாரப் பிரிவின் திறைசேரி பிணையங்கள் மற்றும் முறிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன.

#### 3.2. கடன்படுநர்

கடன்படுநராகக் குறிப்பிடப்பட்டிருப்பது அவர்கள் தீர்க்கப்பட வேண்டிய பெறுமதி ஆகும். சகல ஐயக் கடன்களுக்காகவும் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### 3.3. பொருள் இருப்பு

பொருள் இருப்பு மதிப்பீடு செய்யப்பட்டிருப்பது முதல் கிடைப்பனவு மற்றும் முதல் வெளியேற்றத்தின் அடிப்படையில் ஆகும் (FIFO)

### (4) ஓய்வூதிய பிரதிலாபத்திற்கான ஒதுக்கீடு

1983 இல. 12 கொண்ட பணிக்கொடைச் சட்டம் மற்றும் இலங்கைக் கணக்கீட்டுத் தரத்தின் 16 இற்கமைய பணிப்பாளர் சபைக்கான ஓய்வூதியப் பணிக்கொடைக்காக கணக்குகளில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2012.12.31ஆம் திகதியன்று கணக்குகளின் நிலமைக் கூற்று
## 2012.12.31 ஆம் திகதியன்று நிலையான சொத்துக்கள் - தலைமையகம்

| வகைகள் | 2012.01.01.ஆம் திகதியன்று செலவீனம் | கூட்டு | வெளியேற்றல் | 2012.12.31.ஆம் திகதியன்று செலவீனம் | 2012.01.01.ஆம் திகதயன்ற திரண்ட தேய்மானம | வெளியேற்றல் | தேய்மானம் - 2012 | 2012.12.31ஆம் தியன்று திரண்ட தேய்மானம் | 2012.12.31 wD ஆம் தியன்று பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காணி | 134,855,770.00 | 70,000,000.00 | - | 204,855,770.00 | - | - | - | - | 204,855,770.00 |
| கட்டடம் | 156,912,116.58 | 85,564,933.33 | - | 242,477,049.91 | 14,340,209.58 | 1,088,089.11 | 6,593,477.22 | 19,845,597.69 | 222,631,452.22 |
| ஆய்வு கூட பொருத்துதல்கள் மற்றும் உபகரணம | 59,792,231.64 | 5,912,730.00 | 786,212.00 | 64,918,749.64 | 35,307,264.69 | 786,206.00 | 3,250,858.82 | 37,771,917.51 | 27,146,832.13 |
| அலுவலக தளபாடம் மற்றும் உபகரணம் | 18,891,614.56 | 3,088,526.05 | 1,383,897.32 | 20,596,243.29 | 11,928,785.66 | 1,229,069.92 | 1,575,479.87 | 12,275,195.61 | 8,321,047.68 |
| இயந்திர உபரககணரம் மற்றும் கருவிகள் | 3,363,900.00 | - | - | 3,363,900.00 | 1,744,235.28 | - | 336,390.00 | 2,080,625.28 | 1,283,274.72 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை | 762,013.65 | - | - | 762,013.65 | 680,920.35 | - | 14,405.48 | 695,325.83 | 66,687.82 |
| மோட்டார் வாகனம் | 66,228,940.00 | - | - | 66,228,940.00 | 47,338,148.87 | - | 10,002,561.77 | 57,340,710.64 | 8,888,229.36 |
| **மொத்தம்** | **440,806,586.43** | **164,566,189.38** | **2,170,109.32** | **603,202,666.49** | **111,339,564.43** | **3,103,365.03** | **21,773,173.16** | **130,009,372.56** | **473,193,293.93** |

## 2012.12.31 ஆம் திகதியன்று நிலையான சொத்துக்கள் - துன்கந்தாவ தும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்

| வகைகள் | 2012.01.01.ஆம் திகதியன்று செலவீனம் | கூட்டு | 2012.12.31.ஆம் திகதியன்று செலவீனம் | 2012.01.01.ஆம் திகதயன்ற திரண்ட தேய்மானம் | தேய்மானம் - 2012 | 2012.12.31ஆம் தியன்று திரண்ட தேய்மானம் | 2012.12.31 wD ஆம் தியன்று பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| துன்கந்த - காணி | 21,449,599.25 | | 21,449,599.25 | | | | 21,449,599.25 |
| துன்கந்த - மாதிரி ஆலைக் கட்டடம் | 25,285,853.40 | - | 25,285,853.40 | 1,973,105.67 | 632,146.34 | 2,605,252.01 | 22,680,601.40 |
| மாதிரி ஆலை இயநட்திர உபகரணம் | 7,448,015.70 | 1,001,600.00 | 8,449,615.70 | 3,128,166.59 | 1,689,923.14 | 4,818,089.73 | 3,631,525.97 |
| மாதிரி ஆலை கணனி உதிரிப்பாகங்கள | - | 117,100.00 | 117,100.00 | - | 23,420.00 | 23,420.00 | 93,680.00 |
| அலுவலக இயந்திரம் மற்றும் ஏனையவை | 36,300.00 | 121,780.40 | 158,080.40 | 3,630.00 | 15,808.04 | 19,438.04 | 138,642.36 |
| மோத்தம் | **54,219,768.35** | **1,240,480.40** | **55,460,248.75** | **5,104,902.26** | **2,361,297.52** | **7,466,199.78** | **47,994,048.98** |

## தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
## 2012.12.31ஆம் திகதியன்று நிதி நிலைமைகள் தொடர்பான குறிப்புக்கள்

| இல | | | Rs. |
|---|---|---|---|
| 2 | <u>பொருள் இருப்பு</u> | | |
| | பொதுவாக சபையின் செயற்பாடுகள். | | 5,728,609.33 |
| | மூலதன அபிவிருத்தி நிதியம் | | 1,113,294.00 |
| | | | **6,841,903.33** |
| 3 | <u>லோகர் மகளிர் கடன் நிதியம்</u> | | |
| | அடிப்படை வைப்பு மற்றும் திரண்ட வட்டி (பணியாளர் சபைக்கு வழங்கப்பட்ட கடன் மீதி 4%) இக்கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. | | **1,601,594.73** |
| 4 | <u>பல்வகைக் கடன்படுநர்.</u> | | |
| | பொதுவான சபைச் செயற்பாடுகள். | 6,123,028.38 | |
| | மூலதன அபிவிருத்தி நிதியம் | 748,759.92 | |
| | விலையினை நிலைப்படுத்தும் யோசனைத திட்டமும் எரிபொருள் நிதியமும் | 26,089,858.03 | |
| | ஆலை அபிவிருத்தி நிதியம் | 1,664,769.10 | |
| | N.R.I. நிதியம் | 5,124.43 | **34,631,539.86** |
| 5 | <u>பணியாளர் சபை கடன்படுநர்.</u> | | |
| | இடர் கடன் | 11,212,066.87 | |
| | விழா முற்பணம் | 139,500.00 | |
| | மோட்டார் சைக்கில் கடன் | 931,753.00 | |
| | துவிச்சக்கர வண்டிக் கடன் | 16,800.00 | |
| | விசேட சம்பள முற்பணம் (1) | 594,330.00 | **12,894,449.87** |

**6** <u>**கடன்**</u>

**மூலதன அபிவிருத்தி நிதியம்**

<u>**பிசிசி லங்கா தனியார் கம்பனி**</u>

| | |
|---|---|
| 2012 மார்ச் மாதம் 7ஆம் திகதி 3ஆம் திகதி 25,000¤000 நிதி வரிவிதிப்புக் குழு மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் | 25,000,000.00 |
| அந்நிதி மாதந்திற்கு 2 மிலிலியன் விகிதமாசாரத்தின் கீழ் மீளச் செலுத்துவதற்காக 6 மாத கால சலுகைக் காலத்திற்கு | 50,000.00 |
| அமைய 2002 மார்ச் 14ஆம் திகதி விடுவிக்கப்பட்டது. மீள செலுத்துவதற்காக 2003ஆம் ஆண்டு இறுதியில் ருபா | 24,950,000.00 |
| 50,000 நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. | 6,600,000.00 |
| கணக்கு அடிப்படையில் 2004 ஒக்டோபர் 20ஆ் திகதி பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் ஆலொசனைக்கு இணங்க ரூபா 6,600,000 நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இக்கடன் நிதியில் எதுவும் இதுவரையில் பிபிசி தனியார் கம்பனியினால் செலுத்தாப்படவில்லை. எனவே, பெருந்தோட்ட கைத்தொழிரல் அமைச்சின் ஊடாக அரச வர்த்தக மறுசீரமைப்பு குழு மூலம் உரிமை சமர்ப்பிக்கப்பட்டிருப்பது, பிபிசி தனியார் நிறுவனத்தினை மீள்கட்டமைப்பதற்காக கருத்திற் கொள்ளும் போது பிரதான பெறுப்பான தெங்கு அபிவிருத்தி சபையின் கடன்நிதியினை செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. | 31,550,000.00 |

<u>**கிரியால கமநலக் கம்பனியின் கடன்**</u>

| | |
|---|---|
| தெங்குக் கொளவனவுக்காக 2006.7.11ஆம் திகதி பெரியால கமநலக் கம்பனிக்குச் செலுத்தப்பட்ட கடன் | 2,000,000.00 |
| 2006ஆம ் ஆண்டுக்குள் தீர்க்கப்பட்ட அளவு | (500,000.00) |
| 2008ஆம ் ஆண்டுக்குள் தீர்க்கப்பட்ட அளவு | (50,000.00) |
| | 1,450,000.00 |

**விலையினை நிலைப்படுத்தும் யோசனைத் திட்டம் - எரிபொருளு் நிதியம்**

| | |
|---|---|
| பிபிசீ லங்காவுக்கு வழங்கப்பட்ட கடன் | 26,715,037.00 |
| | **59,715,037.00** |

| | | | |
|---|---|---|---|
| 7 | <u>**கப்ருக்க உற்பத்தி ஊக்குவிப்பு கடன் யோசனைத் திட்டம்**</u> | | **2,490,000.00** |
| 8 | **பல்வகை முற்பணம்** | | |
| | எரிபொருள் முற்பணம் | 21,535.00 | |
| | | 3,600.00 | **25,135.00** |
| 9 | <u>பல்வகை வைப்பு</u> | | **653,853.34** |
| 10 | <u>திறைசேரி பற்றுச்சீட்டு</u> | | |
| | பொது ஊழியர் சபை செயற்பாடுகள். | | 17,577,545.18 |
| | மூலதன அபிவிருத்தி நிதியம் | | 8,438,885.65 |
| | விலையினை நிலையாகப் பேணும் யோசனைத் திட்ட எரிபொருள் நிதியம் | | 192,016,417.64 |
| | <u>என்.ஆர்ஜ நிதியம்</u> | | 131,427.84 |
| | | | **218,164,276.31** |

| | | | |
|---|---|---|---|
| *11* | <u>**முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**</u> | | |
| | **பொது ஊழியர் சபை செயற்பாடுகள்.** | | |
| | மோட்டார் வாகனக் காப்புறுதி | 7,537.99 | |
| | காப்புறுதி நெடுஞ்சாலை நிதி | 3,627.08 | |
| | அலுவல உபகரணத்தின் மீதான சேவைக் கட்டணம் | 460,147.38 | |
| | தேசிய காப்புறுதி உறுதியினைப் புதுப்பத்தல். | 2,032,476.02 | |
| | தீப் பாதுகாப்பு பிரிவு | 106,153.66 | |
| | தொடர்பு சாதனம் | 39,830.00 | |
| | | | **2,649,772.13** |
| *12* | <u>**புல்வகைக் கடன்படுநர்.**</u> | | |
| | **பொது ஊழியர் சபை செயற்பாடுகள்.** | | 4,587,625.25 |
| | **2012.12.31ஆம் திகதியன்று கொள்வனவு கடன்படுநர்கள்.** | | 330,992.05 |
| | | | 4,918,617.30 |
| | **மூலதன அபிவிருத்தி நிதியம்** | | 5,332,910.63 |
| | | | **10,251,527.93** |
| *13* | <u>**மீள்செலுத்த வேண்டிய வைப்பு**</u> | | |
| | பிணை வைப்பு | | 16,425.84 |
| | கேள்வி வைப்பு | | 194,000.00 |
| | <u>தரச் சான்றிதழ்</u> | | 32,174.83 |
| | <u>**மீளசெலுத்த வேண்டிய வைப்பு - டியுக் வீதி**</u> | | |
| | அரச பெருந்தோட்டக் கம்பனி | 360,000.00 | |
| | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி | 390,000.00 | 1,575,000.00 |
| | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | | **1,817,600.67** |
| *14* | <u>**முன்னர் பெறப்பட்ட கிடைப்பனவு**</u> | | |
| | **பொது ஊழியர் சபை செயற்பாடுகள்.** | | |
| | எரிபொருள் ஆலயங்களைப் பதிவு செய்தல் | 1,650.00 | |
| | ஏலவிற்பனையாளர்கள் - தரகர்களைப் பதிவு செய்தல். | 4,000.00 | |
| | கொப்பரா வர்த்தகர்களைப் பதிவு செய்தல். | 3,350.00 | |
| | பிரதான தெங்கு உள்ளீடு உற்பதிகளைப் பதிவு செய்தல். | 178,000.00 | |
| | சிறிய தெங்கு உள்ளீடு உற்பத்திகளைப் பதிவு செய்தல். | 106,000.00 | |
| | விநியோகஸ்தரகளைப் பதிவு செய்தல். | 243,500.00 | |
| | தென்னந் தோட்டங்களைப் பதிவு செய்தல். | 14,500.00 | |
| | ஏற்றுமதியாளர்கள் நார் மற்றும நார் உற்பத்தி | 464,546.80 | |
| | மூலதன அபிவிருத்தி நிதியம் | 6,077,671.22 | **7,093,218.02** |
| *15* | <u>**திரண்ட செலவீனம்**</u> | | |
| | **பொதுச் சபைச் செயற்பாடுகள்** | | **1,733,216.03** |
| *16* | <u>**காணி மீள் மதிப்பீடு**</u> | | |
| | 2012.-1.1 ஆம் திகதி அன்று நிலுவை | 132,811,600.00 | |
| | டியூக் வீதியில் காணி மீள் மதிப்பீடு | 70,000,000.00 | 202,811,600.00 |
| | துன்கந்தாவ காணி மற்றும் கட்டிடம் | | 23,891,309.00 |
| | | | **226,702,909.00** |
| *17* | <u>**காணி மீள்மதிபபீடு**</u> | | |
| | பொதுச் சபைச் செயற்பாடுகள் | | |
| | 2012.01.01ஆம் திகதியன்று நிலுவை | 87,081,311.00 | |
| | டியுக் வீதியின் காணி மீள் மதிப்பீடு | 77,883,908.33 | **164,965,219.33** |
| *18* | <u>மாட்டார் வாகன மீள்மீள்மதிப்பீடு</u> | | **46,049,983.00** |
| *19* | <u>**அரச வழங்கல் மற்றும் நிதி வழங்கல்**</u> | | |
| | 2012.12.31ஆம் திகதியன்று நிலுவை | | **77,870,555.00** |

**20** <u>அரச மூலதன வழங்கல்</u>

| | |
|---|---|
| 2012.01.01ஆம் திகதியன்று நிலுவை | 64,825,802.09 |
| கூட்டு : 2012ஆம் அண்டுக்காக திறைசேரி வழங்கல் | 17,846,834.34 |
| 2012.12.31ஆம் திகதியன்று நிலுவை | **82,672,636.43** |

**21** <u>மூலதன அபிவிருத்தி வழங்கல் ரூபா 77,652,767.37</u>

| | |
|---|---|
| 2012.01.01ஆம் திகதியன்று நிலுவை | 75,192,353.43 |
| கூட்டு : 2012ஆம் ஆண்டுக்குள் செஸ் வழங்கல் | 2,460,413.94 |
| 2012.12.31ஆம் திகதியன்று நிலுவை | **77,652,767.37** |

**22** <u>செலவீனத்தைவிட மேற்பட்ட திரண்ட வருமானம்</u>

| | |
|---|---|
| பொதுச் சபைச் செயற்பாடுகள் | |
| 2012.01.01ஆம் திகதியன்று நிலுவை | (141,462,332.00) |
| பற்றாக்குறை மிகை | (23,185,897.40) |
| 2012.12.31ஆம் திகதியன்று நிலுவை | **(164,648,229.40)** |

**மூலதன அபிவிருத்தி நிதியம்**

| | |
|---|---|
| 2012.01.01ஆம் திகதியன்று நிலுவை | 77,908,481.28 |
| பற்றாக்குறை மிகை | (9,801,403.95) |
| 2012.12.31ஆம் திகதியன்று நிலுவை | **68,107,077.33** |

**விலையினை நிலையாகப் பேணுதல்.**

| | |
|---|---|
| 2012.01.01ஆம் திகதியன்று நிலுவை | 298,536,215.01 |
| பற்றாக்குறை மிகை | (46,705,749.38) |
| 2011 கணிப்பீட்டுக்கு அமைய வட்டி | (396,925.70) |
| 2012.12.31ஆம் திகதியன்று நிலுவை | **251,433,539.93** |

**NRI நிதியம்**

| | |
|---|---|
| 2012.01.01ஆம் திகதியன்று நிலுவை | 124,657.22 |
| பற்றாக்குறை மிகை | 11,895.05 |
| 2012.01.01ஆம் திகதியன்று நிலுவை | **136,552.27** |

## தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

## 2012.12.31ஆம் திகதியன்று முடிவடைந்த விளக்கமான வருமான கூற்றுக்கான குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| 1 | **வட்டி வருமானம்** | | |
| | **பொதுச் சபைச் செயற்பாடுகள்** | | |
| | பணியாளர் சபை கடன் மற்றும் வட்டி | 603,156.06 | |
| | லோகர் மகளிர் கடன் நிதி வட்டி | 44,306.28 | |
| | முதலீட்டு மீதான வட்டி (திறைசேரிப் பற்றுச்சீட்டு ) | 1,523,240.76 | |
| | நிலையான வைப்பு மீதான வட்டி | 941,911.83 | 3,112,614.93 |
| | **மூலதன அபிவிருத்தி நிதியம்** | | |
| | திறைசேரி பற்றுச்சீட்டுக்கள் மீதான வட்டி | 1,048,938.00 | |
| | நிலையான வைப்பு மீதான வட்டி | 163,356.14 | 1,212,294.14 |
| | **விலையினை நிலையாகப் பேணும் யோசனைத் திட்டத்திற்கு எரி பொருள் நிதியம்** | | |
| | திறைசேரி பற்றுச்சீட்டின் மீதான வட்டி | 9,032,537.91 | |
| | எஸ்.ஐ.டி.எஸ் நிதியத்தின் மீதான வட்டி | 12,591,451.00 | |
| | நிலையான வைப்பு மீதான வட்டி | 1,585,899.04 | |
| | சேமிப்புக் கணக்கு மீதான வட்டி | 84,362.70 | 23,294,250.65 |
| | என்ஆர்.ஐ நிதியம் - திறைசேரி பற்றுச் சீட்டுக்கள் மீதான வட்டி | | 11,895.05 |
| | | | **27,631,054.77** |
| 2 | **வாடகை வருமானம்** | | |
| | **பொதுச் சபைச் செயற்பாடுகள்** | | |
| | அரச பெருந்தோட்டக் கம்பனி | 3,456,667.00 | |
| | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி | 3,240,000.00 | |
| | கருணாகல் பெருந்தோட்டக் கம்பனி | 1,560,000.00 | 8,256,667.00 |
| | **மூலதன அபிவிருத்தி நிதியம்** | | |
| | துன்கந்தாவ தோட்டம் | | 82,984.11 |
| | | | **8,339,651.11** |
| 3 | **பதிவுக் கட்டணங்கள்** | | |
| | **பொதுச் சபைச் செயற்பாடுகள்** | | |
| | பிரதான எரிபொருள் உள்ளீட்டு உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் | 463,145.60 | |
| | சிறு தேங்காய் உள்ளீடு உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் | 369,250.00 | |
| | நார் மற்றும் நார் உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் | 938,477.20 | |
| | கொப்பரா வர்த்தகர்களைப் பதிவு செய்தல். | 22,462.00 | |
| | ஏலவிற்பனையாளர் தரகர்களைப் பதிவு செய்தல். | 40,000.00 | |
| | தென்னந் தோட்ட உரிமையாளர்களைப் பதிவு செய்தல். | 57,705.76 | |
| | உலர்த்தி தேங்காய் ஆலை உரிமையாளர்களைப் பதிவு செய்தல். | 255,000.00 | |
| | தேங்காய் எண்ணெய் ஆலை உரிமையாளர்களைப் பதிவு செய்தல். | 94,398.80 | |
| | தும்பு நார் ஆலை உரிமையாளர்களைப் பதிவு செய்தல். | 162,579.08 | |
| | கொப்பரா உற்பத்தியாளர்களைப் பதிவு செய்தல். | 34,550.00 | |
| | நிலக்கரி உற்பத்தியாளர்களைப் பதிவு செகய்தல். | 3,000.00 | |
| | கொழும்பு ஓரளவு நீக்கப்பட்ட தெங்கு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி | 18,500.00 | |
| | விநியோகஸ்தர்களைப் பதிவு செய்தல். | 184,000.00 | |
| | காபன் உற்பத்தி ஆலை உரிமையாளர்களைப் பதிவு செய்தல். | 18,000.00 | |
| | தென்னச் சிரட்டை உற்பத்தி மற்றும் முடிவுப் பொருள் உற்பத்தி | 33,260.00 | **2,694,328.44** |
| 4 | **துண்டுக் கட்டண வருமானம் கொப்பரா மற்றும் தேங்காய்** | | **4,573,262.96** |
| 5 | **ஆராய்சசி வருமானம்** | | |
| | தரச்சான்றிதழ் | 2,957,211.87 | |
| | உலர்த்தி தேங்காய் மாதரி விற்பனை | 101,532.09 | |
| | தும்புநார் பகுப்பாய்வுக் கட்டணம் | 229,830.00 | |
| | நீர் மாதிரிக் கட்டணம் | 903,305.70 | **4,191,879.66** |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | **பல்வகை வருமானம்** | | | |
| | **பொதுச் சபைச் செயற்பாடுகள்** | | | |
| | கேள்வி வைப்புக்கள் | | 51,500.00 | |
| | சஞ்சிகை விற்பனை | | 123,679.70 | |
| | பல்வகை வருமானம் | | 326,760.02 | |
| | லேபல் கட்டணம் | | 1,043,500.00 | |
| | வெளியேற்றப்பட்டவற்றை விற்பனை செய்தல். | | 55,851.02 | |
| | மிகைக் கட்டணம் | | 104,966.34 | 1,706,257.08 |
| | **மூலதன அபிவிருத்தி நிதியம்** | | | 68,420.16 |
| | | | | **1,774,677.24** |
| 7 | **விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி வேலைத்திட்டங்கள்** | | | |
| | சந்தை கண்கபாட்சி செலவீனம் மற்றும் வெளிநாட்டுக் பயணம்' | | (4,953,005.97) | |
| | வர்த்தக விளம்பரம் மற்றும் சந்தை ஊக்குவிப்பு | | | |
| | துறைசார் உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் செலவீனம் | | | |
| | கண்காட்சிச் செலவினம் தேசத்திற்கு மகுடம் மற்றும் ஏனையவை | | | |
| | ஆய்வு மற்றும் ஆராய்ச்சிச் செலவீனம் | | | |
| | இலங்கையில் தேங்காய் எண்ணெய்யை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி ஊக்குவிப்பு | | (8,362,840.68) | (13,315,846.65) |
| | இளநீர் அபிவிருத்தி வேலைத்திட்ட செலவனம் | | | |
| | கப்ருக்க இசுரு சல - நாரஹேனன்பிட்ட | | | |
| | விற்பனை | | 2,094,700.00 | |
| | **கழி**: 2012.1.1ஆம் திகதியன்று பொருள் இறுப்பு | 393,256.82 | | |
| | கொள்வனவு | 2,295,816.94 | | |
| | | 2,689,073.76 | | |
| | கழி : 2012.12.31அன்று பொருள் இருப்பு | (463,294.00) | 2,225,779.76 | |
| | விற்பனை செலவீனம் | | (131,079.76) | |
| | தேறிய இலாபம் /நட்டம் | | | |
| | செலவீனம் | | (347,088.62) | |
| | தேறிய இலாபம் ∴நட்டம் | | **(478,168.38)** | (478,168.38) |
| | | | | **(13,794,015.03)** |
| 8 | **செற்பாட:டு அபிவிருத்தி வேலைதிட்டம்** | | | |
| | அபிவிருத்தி செயற்திட்டம் வேலைதிட்டங்கள் | | (39,961,438.83) | |
| | ஆலை அபிவிருத்தி நிதியக் கணக்கீட்டு நிதியத்தினை மாற்றுதல். | | (8,151,444.60) | (48,112,883.43) |
| | தும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் - துன்கந்தாவ | | | |
| | விற்பனை | | 940,415.11 | |
| | கொள்வனவு - மூலப்பொருள் | 1,203,840.00 | | |
| | **கழி** : 2012.12.31ஆம் திகதியன்று பொருள் இருப்பு | (650,000.00) | | |
| | விற்பனைச் செலவீனம் | | 553,840.00 | |
| | தேறிய இலாபம் | | 386,575.11 | |
| | சம்பளம் | (2,651,002.95) | | |
| | ஊழியர் சேமலாப நிதியம் | (910,635.80) | | |
| | மின்சாரம் | (325,982.15) | | |
| | பாதுகாப்பு | (334,345.43) | | |
| | காப்புறுதி | (172,953.39) | | |
| | ஏனையவை | (675,412.32) | (5,070,332.04) | |
| | தேறிய இலாபம் / நட்டம் | | | **(4,683,756.93)** |
| | | | | **(52,796,640.36)** |
| 9 | **தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்பு** | | | |
| | வரவேற்று வேலைத்திட்டங்கள் மற்றும் ஏனைய செலவீனம் | | (671,637.67) | **(671,637.67)** |

# 6. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

## 6.1 உள்ளீடுகள் மற்றும் கோரம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் சபையின் நிறைவேற்று அல்லாத மூன்று பணிப்பாளர்கள் அடங்குகின்றனர். மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள பணிப்பாளர்கள் குழுவில் அங்கத்தவர்களாகச் செயற்பட்டனர்.

1. திரு.எஸ்.எச்.ராஜபக்ஷ - தலைவர் / திறைசேரியின் பிரதிநிதி
2. திரு.ஜனக்க தர்மகீர்த்தி - அங்கத்தவர் / அமைச்சின் பிரதிநிதி
3. திரு.டி.எச்.எல்.பண்டாரநாயக்க - அங்கத்தவர் / அமைச்சின் பிரதிநிதி
4. திரு.எல்.பீ.கே.டப்ளியூ.வெலிவத்த - அங்கத்தவர்
5. திரு.ஆர்.எஸ்.வீரமன் - அங்கத்தவர்

கணக்காய்வாளர் பிரதிநிதி மற்றும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் கூட்டத்தில் பங்கேற்றனர். குழுவின் முகாமைத்துவத்தினைப் பிரதிநித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் எவருமில்லை. பணிப்பாளர் நாயகத்தின் அழைப்புக்கு அமைய கூட்டத்தில் பங்கேற்றார். முகாமைத்துவத்தின் ஏனைய அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர் சபையின் ஏனைய அங்கத்தவர்களின் பங்கேற்புடன் குழுவுக்குத் தேவையான சந்தர்ப்பத்தில் கூட்டத்துக்காக பங்கேற்க அழைப்பு விடுக்கப்படுகின்றது. சபையின் செயலாளர் / பணிப்பாளர் நிர்வாகக் குழுவின் செயலாளராகச் செயற்படுகிறார். குழுவின் அங்கத்தவர் கோரம் 03 ஆகும்.

## 6.2 குழுவின் செயற்பாடுகள்

- மாதிரி மற்றும் உள்ளீட்டு மீளாய்வுகள் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் நிதி வெளிப்பாடுகளும், நிதி அறிக்கைப்படுத்தல் முறையிலும் நம்பகத் தன்மையினை மேற்பார்வைக்கு உட்படுத்தல்.
- வெளி மற்றும் உள்ளகக் கணக்காய்வுகளின் விடயத்தினை அடிப்படையாகக் கொண்ட பயன்பாட்டினை உறுதிசெய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகளின் மேற்பார்வை மற்றும் மீளாய்வு.
- உள்ளக நிர்வாக செயற்பாடுகள் மற்றும் பயன்மிக்க மீளாய்வுகளையும், பரிந்துரைகளையும் சமர்ப்பித்தல்.
- உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, வெளிக் கணக்காய்வு மற்றும் அதற்காக முன்னெடுக்கப்பட்ட மீளாய்வுகள்.
- மேற்பார்வை மற்றும் நிதி அறிக்கையினை தேவையுடன் உட்படாமை மற்றும் உரிய மேற்பார்வை அதிகாரியுடன் காணப்படும் தொடர்பினை

உறுதிப்படுத்துவதற்கான விழுமியத் தரங்கள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான மீளாய்வும் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தலும்.

## 6.3 கூட்டம் மற்றும் செயற்பாடுகள்

மீளாய்வுக்குட்படுத்த ஆண்டில் குழு எட்டு (08) முறை கூடியது. கூட்டத்துக்காக குழுவின் அங்கத்தவர்களின் வருகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| பணிப்பாளர்களின் பெயர் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| திருமதி.எஸ்.எச்.ராஜபக்ஷ | 08 |
| திரு.ஜானக தர்மகீர்த்தி | 03 |
| திரு.டி.எச்.எல்.பண்டாரநாயக்க | 03 |
| திரு.எல்.பி.கே.டப்ளியூ.வெலிவத்த | 08 |
| திரு.ஆர்.பீ.வீரமன் | 08 |
| கணக்காய்வாளர் அதிகார் (அழைப்பு) | 07 |

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் குழுவினால் கீழ்க்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன.

### 6.3.1 உள்ளகக் கணக்காய்வு

- 2012ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களை அமுல்படுத்துவதன் பயன்பாட்டினை மேற்பார்வைக்கு உட்படுத்தல்.
- எதிர்காலத்தில் மீள சம்பவங்கள் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்காக சமகாலச் சீர்திருத்தங்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் விசேட உள்ளகக் கணக்காய்வினை இனங்காணுதலும், அதற்கான முகாமைத்துவ வரவேற்புக்களும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன.
- 2012 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டமிடல் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

### 6.3.2 வெளிக் கணக்காய்வு

- 2012.12.31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தொடர்பில் கணக்காய்வாளரினால் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, முகாமைத்துவக் கடிதம், அதற்காக முகாமையாளரினால் காண்பிக்கப்பட்ட வரவேற்பு, மீளாய்வுக்குட்படுத்தப் பட்டதுடன் விசேடமாகக் காண்பிக்கப்பட்ட பிரச்சினைகள் மீள ஏற்படுவதனை தவிர்க்கும் வகையில் முகாமைத்துவத்தினால் முன்னெடுக்கப்பட்ட திருத்த செயற்பாடுகள் தொடர்பாக பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 6.3.3 நிதி அறிக்கை

- வருடாந்த கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதி வெளிப்பாட்டு மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகள் அதிகார சபையினால் உத்தரவிடப்பட்ட தேவைகளுக்கு மற்றும் உரிய கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தும் போது சபைக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

### 6.3.4 கூட்ட அறிக்கை / சபைக்குச் சமூகமளிப்பு

- குழுக் கூட்டங்கள் தொடர்பாக பொருத்தமான கூட்டறிக்கை சபையின் செயலாளர் அலுவலகத்தில் பேணப்படுகின்றன. குழுக் கூட்டங்களின் சகல அறிக்கைகளும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் சபையின் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காக சபையின் அங்கீகாரம் பெறப்படுகின்றன. கிரமமான அடிப்படையில் முன்னேற்றகரமான விடயங்கள் தொடர்பில் பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

குண்க்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழவின் யோசனையாக அமைவது போதியளவு உள்ளக நிருவாகத்தினை பயன்மிக்க முறையில் அமுல்படுதுவது மற்றும் சொத்துக்களை போதியளவு பயன்படுத்திப் பாதுகாப்பதாகும. மேலும், அதிகார சபையுடன் தொடர்புபட்ட கோட்பாடுகள் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் முன்னெடுக்கப்படக்கூடிய திருத்தங்கள் மற்றும் தவிர்ப்புக்கள் தொடர்பில் குழு திருப்தியடைந்துள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இவ்வறிக்கையினை 2013 ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி அங்கீகரக்கப்பட்டது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No: வைஎஸ்/எப்/சீடீஏ/எப்ஏ/2012

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date: 2013 ஆகஸ்ட் 29

தலைவர்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2013 மே 10 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கொடுக்கல் வாங்கல்களின் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 642,561 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவரினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அதன் பிரகாரம் கணக்குகளில் அக்குறைபாடுகள் தொடர்பாக சீராக்கங்கள் செய்யப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீள சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனவே தெரிவுக்குப் புறம்பாக மேலும் கணக்கீட்டுக் குறைபாடுகள் இல்லை என்பதனை மறுக்க முடியாதிருந்தது.

### 2.2.2 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் 2006 ஆம் ஆண்டின் போது விவசாயக் கம்பனியொன்றிற்கு ரூபா 2,000,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 6 மாதத்திற்குள் வட்டி தவிர்த்து சமமான தவணைகளில் செலுத்தித் தீர்க்க வேண்டிய போதிலும் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 550,000 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது.

(ஆ) அதிகாரசபையின் உத்தியோகத்தர் ஒருவர் தவறாகப் பயன்படுத்திய பணத்திற்காக 1998 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டியிருந்த வட்டியையும் உள்ளடக்கிய ரூபா 1,664,769 இனை அறவீடு செய்யாமல் கணக்குகளில் தொடர்ந்து காட்டப்பட்டிருந்தது.

(இ) வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றிலிருந்து 1985 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 26,715,037 தொகையான கடன் பணத்தில் 2008 தொடக்கம் 2012 ஆம் ஆண்டுகளுக்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 20 மில்லியன் வட்டிப் பணத்தை அறவிட முடியாமல் தேங்காய் எண்ணெய் விலையினை நிலைநிறுத்துதல் நிதியத்தின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக வட்டியில்லாக் கடனாக 2004 ஆம் ஆண்டின் போது ரூபா 31.55 மில்லியன் தொகை அக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இக்கடன் பணத்தையும் அதிகாரசபையினால் அறவிடமுடியாதிருந்தது.

(ஈ) உலர்ந்த தேங்காய் உரிமையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய கட்டணம் மற்றும் உடன் தேங்காய் மற்றும் கொப்பரா தேங்காய் என்பவற்றின் ஏல விற்பனை செயற்பாடுகளில் அறவிட வேண்டிய நில வாடகையான ரூபா 3,321,715 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவீடு செய்வதற்கு அதிகாரசபையினால் முடியாதிருந்தது.

(உ) அதிகாரசபையின் கோட்டை பிரபு வீதியில் அமைந்துள்ள கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டு 2012 ஆம் ஆண்டிற்காக பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் பெருந்தோட்டக் கம்பனியிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,086,667 தொகையான வாடகைப் பணம் 2012 திசெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடன்பட்டோர் மீதியில் மூன்று வருடத்திற்கு மேற்பட்ட பழைய கடன்பட்டோர் மீதி ரூபா 180,485 ஆக இருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் செயற்பாடுகளின் செயலாற்றல் விளைவு ரூபா 9.68 மில்லியன் பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 13.85 மில்லியன் ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 4.17 மில்லியன் தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. ஆண்டின் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 41.92 மில்லியனால் அதிகரித்திருந்த போதும் திறைசேரி மானியம் மற்றும் ஏனைய வருமானங்கள் முறையே ரூபா 39.23 மில்லியன் மற்றும் ரூபா 6.86 மில்லியன் இனாலும் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) அதிகாரசபையின் மொத்த வருமானங்களில் 69 சதவீதம் திறைசேரி மானியங்களையும் , 12 சதவீதம் வட்டி வருமானங்களையும், 16 சதவீதம் செயற்பாட்டு வருமானங்களையும் மற்றும் 3 சதவீதம் நானாவித வருமானங்களையும் கொண்டிருந்தன.

(ஆ) தேங்காய் எண்ணெயின் விலையினை நிலை நிறுத்துதல் நிதியத்திலிருந்து கம்பனி ஒன்றுக்கு வழங்கப்பட்ட கடன் பணத்திற்குரிய ரூபா 4 மில்லியன் தொகையான மீளாய்வாண்டின் மொத்த வட்டி வருமானம் இந்த ஆண்டின் போதும் ஐயக் கடனாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் நானாவித கடன்பட்டோரான ரூபா 35 மில்லியனில் ரூபா 20 மில்லியன் அதாவது 57 சதவீதம் ஐயக் கடனாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல்

(அ) விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரின் கீழ் அமுல்படுத்தப்பட்ட "தனியார் பிரிவுடன் இணைந்து வெளிநாட்டு சந்தைவாய்ப்புக்களைக் கண்டறிதல்" செயற்திட்டத்திற்காக ரூபா 1.6 மில்லியன் தொகையான நிதியேற்பாடு செலவிடப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பௌதீக செயலாற்றல் குறைந்த நிலையில் காணப்பட்டது.

(ஆ) செயன்முறை அபிவிருத்திப் பிரிவின் கீழ் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 4 செயற்திட்டங்களுக்குரிய செயலாற்றல் 50 சதவீதத்தை விடக் குறைந்த நிலையில் காணப்பட்டது.

(ii) மூன்று செயற்திட்டங்களுக்குரிய பௌதீக செயலாற்றலாக ஒரே நடவடிக்கையான "உற்பத்தி நிலையங்களுக்காக ஐந்து சோடி பெட்டிகளை கட்டளையிடுதல்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iii) "தேங்காய் எண்ணெய், தும்பு மற்றும் தும்புசார்ந்த கைத்தொழில்களை நவீனமயப்படுத்தல் மற்றும் நியமப்படுத்தல்" செயற்திட்டங்களுக்குரிய நிதிசார் செயல்முன்னேற்றம் குறிப்பிடப்படாது பௌதீக செயலாற்றல் 56 சதவீதம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

**4.1.2 நட்டத்துடன் செயற்பட்ட செயற்திட்டங்கள்**

அதிகாரசபையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற துன்கண்ணாவ தும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டம் 2010, 2011 மற்றும் 2012 ஆம் வருடங்களில் முறையே ரூபா 2,670,717 , ரூபா 1,365,368 மற்றும் ரூபா 4,683,757 ஆக நட்டமடைந்திருந்தன.

**4.1.3 தேங்காய் எண்ணெய் கைத்தொழிலாளர்களை பதிவு செய்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டில் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் தேங்காய் எண்ணெய் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற தேங்காய் எண்ணெய் ஆலைகளின் எண்ணிக்கை 589 ஆக இனங்காணப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் இறுதிவரையில் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் வருடாந்தம் பதிவு செய்திருந்த கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை 42 மாத்திரமாக இருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட பிரகாரம் தேங்காய் எண்ணெய் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களில் வருடாந்தம் அதிகாரசபையில் பதிவு செய்து அவர்கள் உற்பத்தி செய்கின்ற தேங்காய் எண்ணெயின் தரம் மற்றும் நியமங்களை பரிசோதனை செய்யாமையினால் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சகல தேங்காய் எண்ணெயினதும் தரம் மற்றும் நியமங்களை பரிசோதனை செய்வதற்காக பொது நடைமுறை காணப்படாமையினால் சந்தையில் தரம் மற்றும் நியமங்களில் குறைவான தேங்காய் எண்ணெய் காணப்படும் ஆபத்து காணப்பட்டது.

**4.2 செயற்பாடற்ற நிதியம்**

அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்ற உலர்ந்த தேங்காய் ஆலை அபிவிருத்தி நிதியத்தின் மீதி 2011 ஆம் ஆண்டில் ரூபா 60 மில்லியன் தொடக்கம் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 73.5 மில்லியன் வரை அதிகரித்திருந்த போதிலும் நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக உரிய முறையில் இப்பணம் ஈடுபடுத்தப்படாமையினால் நிதியத்தின் பணம் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**4.3 நோக்கத்திற்கு முரணான செலவினம்**

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் செயன்முறை அபிவிருத்திப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற துன்கண்ணாவ தும்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் "தும்பு மற்றும் தும்புப் பொருள் உற்பத்தி கைத்தொழிலில் வலுச் சக்தியை சேமிக்கும் அலகினை ஸ்தாபித்தல்" செயற்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் மூலதனச் செலவினத்தின் கீழ் ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இப்பணம் முழுவதும் செயற்திட்டத்தின் மீண்டெழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தமையினால் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களுக்கு முரணாக அவை செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 பதவியணியினர் நிருவாகம்

அதிகாரசபையின் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 7 | 6 | 1 |
| மூன்றாம் நிலை | 9 | 3 | 6 |
| இரண்டாம் நிலை | 58 | 40 | 18 |
| ஆரம்ப நிலை | 96 | 72 | 24 |
| மொத்தம் | 170 | 121 | 49 |

செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய 49 பதவிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதியத்தின் பயன்பாடு
(ஆ) பெறவேண்டிய கணக்குகள்
(இ) மனிதவள முகாமைத்துவம்

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி